பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

நூலகத்துறைப் படிப்பகம்


# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 23 வெள்ளிக்கிழமை (07~07~2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:154


# இந்திய ஆலோசனைப் பிரகாரம் தமிழருக்கு சுயாட்சி அதிகாரம்!



## லக்ஷ்மன் ஜெயக்கொடி டில்லியில் தகவல்

புதுடில்லி,ஜூலை7

**இந்தியா வழங்கும் ஆலோசனைகளின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமைகளை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சிறப்புத் தூதுவராக புதுடில்லி வந்துள்ள அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி இத் தகவலை நேற்று வெளியிட்டார்.**

அமைச்சர் ஜெயக்கொடி தமது மூன்று நாள் விஜயத்தின்போது பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோருடன் விரிவான பேச்சுக்களை நடத்தினார்.

அந்தப் பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்தியா வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கும் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வெடிப்பு

வவுனியா,ஜூலை7

வவுனியாவில் அட்டவத்கடவேவ என்னும் இடத்தில் நேற்றிரவு 7.30 மணியளவில் கிரனேட் ஒன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அமைப்பை தாய்லாந்து உடனடியாகத் தடைசெய்யாது

கொழும்பு,ஜூலை7

தாய்லாந்துக்குள் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் இடம்பெறுவது தொடர்பாகப் போதிய ஆதாரங்கள் கிடைக்காமல் அந்த அமைப்பை உடனடியாகத் தடை செய்ய முடியாது.

மேற்கண்டவாறு கொழும்பில் உள்ள தாய்லாந்துத் தூதுவர் தக்கோர் பெரிற் தெரிவித்தார்.

தம்மைச் சந்தித்த பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகளிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்த அந்தக் குழு புலிகளைத் தடைசெய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்தது. (இ-3-4)

## ஜெயக்கொடி பாகிஸ்தானுக்கும் செல்கிறார்

கொழும்பு,ஜூலை7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட தூதராக இந்தியா சென்றுள்ள சமய கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பாகிஸ்தானுக்கும் செல்லவிருக்கின்றார்.

அவருடன் ஜனாதிபதியின் செயலாளர் கே.பாலபட்டபெண்டியும் ராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியாவும் செல்கின்றனர்.

பாகிஸ்தான் அளித்த உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் ஜனாதிபதியின் கடிதத்தையும் அவர் எடுத்துச் செல்கிறார். (இ-க-3)

# புலிகள் மீதான தடை உள்ளவரை இந்திய பங்களிப்பை ஏற்க முடியாது!

## அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு



புதுடில்லி,ஜூலை7

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா முக்கிய பங்கை வகிக்க வேண்டும். ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவில் ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பாக இருக்கும்வரை இந்தியா இந்தப் பங்கினை வகிக்கமுடியாது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'டெக்கான் ஹெரால்ட்' ஆங்கிலத் தினசரியின் நேற்றைய இதழுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

பிராந்தியத்தில் இந்தியாவின் வல்லாண்மையை நாம் நன்கு அறிவோம். எமது அமைப்பின் மீதான தடையை இந்தியா நீக்குவதற்கான காலத்தினை நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். இந்தியாவை ஒரு நட்பு நாடாக ஏற்று இந்தியாவுடன் ஒரு புதிய நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர். விடுதலைப் புலிகளின் போராட்டம் இந்தியாவின் நலன்களுக்கு அச்சுறுத்தலாக அமையவில்லை.

எமது விடுதலைப் போராட்டமானது இந்தியாவின் பூகோள அரசியல் நலன்களுக்கு எந்தவிதமான பாதகத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

இந்தியாவின் நலன்களுக்கு விரோதமாக நாம் செயற்படப் போவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் கிளைமோர் தாக்குதல்

கொழும்பு,ஜூலை7

கிளாலிப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட சமயம் கிளைமோர் கண்ணிவெடியில் சிக்கி சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்று விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

கைதடிப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளின் பதுங்குழிகள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும் அது மேலும் தெரிவித்தது. (இ-3-4)

### தீர்வுப் பொதியை புலிகள் ஏற்காவிடில்

# அரசிடமிருந்து மாற்று யோசனை பெற நோர்வே தரப்பு முயற்சி செய்யும்

லண்டன்,ஜூலை7

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான யோசனைகளை விடுதலைப்புலிகள் ஏற்க மறுத்துள்ள நிலையில் -

மாற்று யோசனைகளை முன்வைத்து சமாதான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடவுள்ளோம்.

மேற்கண்டவாறு நோர்வே அரசின் அரசியல் செயலாளர் ரோமன் ஜோஹ்ஸன் தெரிவித்தார்.

லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசாங்கத்தின் தீர்வு யோசனைகளை விடுதலைப்புலிகள் ஏற்க மறுத்துவிட்டனர். எனினும் மாற்று யோசனையை முன்வைத்து இருதரப்புக்கும் இடையில் பேச்சுக்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

இரு தரப்பினருடனும் தொடர்ந்து தொடர்புகொண்டு வருகிறோம். உண்மையான நோக்கத்துடன் இரு

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர், அதிபர்கள் இன்று சுகவீன லீவுப் போராட்டம்

திருகோணமலை,ஜூலை7

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் இன்று சுகவீன லீவுப் போராட்டம் நடத்தவுள்ளனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெறுகின்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக தமது சங்கம் ஆறு அம்சக் கோரிக்கைகளை ஜனாதிபதி உட்படப் பலருக்கு அனுப்பியதாகவும் -

அவை தொடர்பாகச் சாத்தியமான பதில் கிடைக்கவில்லை என்

(12ஆம் பக்கம் பார்க்க)



இரண்டு தோணிகளில் கால் வைக்கிறார் போல..!

### நாகர்கோயிலில் செவ்வாயன்று

# மரணமான பெண் புலிகள் 29 பேரின் பெயர் விவரம்

வவுனியா,ஜூலை7

நாகர்கோவில் பகுதியில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற மோதலின்போது உயிரிழந்த பெண் புலிகள் 29 பேரின் விவரங்களைப் புலிகளின் குரல் வானொலி நேற்று அறிவித்தது. அவர்களின் விவரம் வருமாறு:-

- கப்டன் இலக்கியா (செல்வரத்தினம் பாமினி - யாழ்ப்பாணம்)
- கலைப்பிரியா (கறுப்பையா தனலட்சுமி - வவுனியா)
- அன்பு (வைரமுத்து புஸ்பவதி - யாழ்ப்பாணம்)
- ஈழப்பிரியா (கிருஷ்ணானந்தம் வேணுகாதேவி - யாழ்ப்பாணம்)
- மாதுரு அல்லது புரட்சிக்கலை (இராசரத்தினம் பத்மராணி - யாழ்ப்பாணம்)
- 2ஆம் லெப்டினன்ட் கல்கி அல்லது தமிழிசை (நடேஸ் தூட்சா

(12ஆம் பக்கம் பார்க்க)

# செம்மணிச் சந்தேக நபர்கள் நால்வருக்கு பிணை அனுமதி

கொழும்பு,ஜூலை7

செம்மணிப் புதைகுழி வழக்குத் தொடர்பாக கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேகநபர்களான நான்கு படை அதிகாரிகளையும் கொழும்பு நீதிமன்றம் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதித்தது.

சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சமர்ப்பித்த மனுவை அரசதரப்புச் சட்டவாதி ஆட்சேபிக்காததை அடுத்து, அவர்கள் நால்வரையும் தலா ஒரு லட்சம் ரூபா ரொக்கப்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

அத்துல உதயகுமார, சிறிவர்த்தன, லலித் துமிந்துதுஷார ஹேரத், டில்சான் அத்துல பெரேரா ஆகியோ, நால்வருமே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர். (இ-

முத்தரப்பு கிரிக்கெட் தொடர்

# நேற்றைய ஆட்டத்திலும் இலங்கை அணி வெற்றி!

காலி,ஜூலை7

சிங்கர் கிண்ணத்துக்கான முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணி 37 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் ஷான் பொலக் இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரிய ஓட்டமெதுவும் பெறாமல் 'ரண்-அவுட்' முறையில் ஆட்டமிழக்க அணியின் நிலைமை மோசமாகியது. இருந்தபோதும் ரசல் ஆர்னல்டுடன் இணைந்து புதிய வீரர் குமார் சங்கஹார சிறப்பாக துடுப்பெடுத்தாடியதால் இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணிக்காக குமார் சங்கஹார 85 ஓட்டங்களையும், ரசல் ஆர்னல்ட் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களையும் பெற்றனர்.

250 என்ற இலக்கிற்காக களமிறங்கிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத்தில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி விக்கெட் இழப்பின்றி 150 ஓட்டங்களை எட்டியது. எனினும் பின்னர் விக்கெட்டுக்கள் மளமளவென்று சரிய அந்த அணி 48.3 ஓவர்களில் 212 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

தென்னாபிரிக்க அணிக்காக ஹரி கிரிஸ்டன் 81 ஓட்டங்களையும் அன்ட்ரூ கோல் 59 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணியின் பந்து வீச்சில் உபுல் சந்தன 4 விக்கெட்டுக்களைச் சரித்தார்.

இந்த ஆட்டத்தின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் இளம் வீரர் குமார் சங்கஹார தெரிவு செய்யப்பட்டார். நேற்றைய ஆட்டம் இவரது இரண்டாவது ஒருநாள் சர்வதேச ஆட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டித் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெறும். (உ-4-8)

மந்திகை ஆஸ்பத்திரியில்

# சடலங்களை எடுத்துச்செல்வதில் நிலவும் தாமதம் நீடிக்கிறது!

வடமராட்சி,ஜூலை7

பிரேத பரிசோதனை செய்வதற்கு டாக்டர்கள் இன்மையால் பிரேதங்களை மந்திகை அரசினர் வைத்தியசாலையிலிருந்து எடுத்துச் செல்வதில் தாமதம் ஏற்படுகின்றன.

இந்த வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்யக்கூடிய எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் எவரும் இன்மையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு ஒப்படைக்கப்படும் பிரேதங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைவோரின் பிரேதங்கள் மீதான மரண விசாரணைகளின் போது பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க குறிப்பிட்ட தராதரம் கொண்ட டாக்டர்கள் எவரும் பல மாதங்களுக்கு மேலாக இங்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரியையே இதற்காக நாடவேண்டியுள்ளது.

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி அங்கு தனது கடமைகளை நிறைவேற்றிய பின்னரே மந்திகை வைத்தியசாலைக்கு வந்து பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இதன் காரணமாக இறந்தவர்களின் உறவினர்கள் உரிய நேரத்தில் பிரேதங்களை வைத்தியசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் மோதல்கள் இடம்பெற்ற கடந்த சில மாதங்களில் இந்த வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட பல பிரேதங்கள் நாள் கணக்கில் தாமதத்தின் பின்னரே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. (இ-173)


## புலமைப் பரிசில் பயிற்சி வகுப்புகள்

நுணாவில் மத்தி, சரஸ்வதி கல்வி நிலைய ஆசிரியை அவர்களால், அவரிடம் பயின்ற மாணவர் நலன்கருதி கீழ்வரும் இடத்தில் தரம் 5 வகுப்புகள்,

இன்று (07-07-2000) வெள்ளிக்கிழமை
பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

ஐங்கரன் வீடியோ அன் ஒடியோ சென்ரர்
ஆனைக்கோட்டை வீதி.
குளப்பிட்டிச் சந்தி.
(கொக்குவில் தபாலகம் முன்பாக)

(C/12163)


## 31 ஆம் நாள் நினைவுநாளும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### வல்லிபுரம் சிவப்பிரகாசம்

(பிரபல சோதிடர்)

அல்வாய் கிழக்கு, காராளர் வளவைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வல்லிபுரம் சிவப்பிரகாசம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் காராளர் வளவு, அல்வாய் கிழக்கிலுள்ள அவரது மருமகன் சி.பேரானந்தம் (இ.போ.ச. சாலைப் பரிசோதகர்) அவர்களின் இல்லத்தில் நாளை (08-07-2000) சனிக்கிழமை நடைபெறும்.

சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

அத்துடன் அவரது இறுதி நேரத்தில் அவரது இறுதிக் கடன்களை நிறைவேற்றியவர்களுக்கும் ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றி நவில்கின்றோம்.

தகவல்:
மாணிக்கம்(மனைவி-ஆசிரியை), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

(C/12166)

## பிறேசிலுக்கு முதலிடம்

லண்டன்,ஜூலை7

உதைபந்தாட்ட அணிகளைத் தரப்படுத்தும் - இங்கிலாந்திலுள்ள - "தரப்படுத்தும் அமைப்பு", ஒன்று இம்முறை பிறேசில் அணிக்கு முதலிடம் வழங்கியுள்ளது.

ஆர்ஜென்ரீனா அணிக்கு இரண்டாம் இடத்தையும் பிரான்ஸ் அணிக்கு மூன்றாம் இடத்தையும் இத்தாலி அணிக்கு நான்காம் இடத்தையும் அந்த அமைப்பு வழங்கியுள்ளது. (உ-8)

## வைத்திய உபகரணங்கள் மீட்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஜூலை7

மருதங்கேணி, பளை, சாவகச்சேரி, கைதடி பகுதிகளிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலுள்ள வைத்திய உபகரணங்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்று சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வைத்தியசாலைகளில் கடமையாற்றிய ஊழியர்கள் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலுமுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

ஊர்காவற்றுறை,ஜூலை7

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் உப அலுவலக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களை நஞ்சூட்டி அழிப்பதற்கான நடவடிக்கைகள் பொதுச் சுகாதார பரிசோதகரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை7

கைது செய்யப்பட்டுக் காணாமல்போனோர் சங்கத்தின் கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-10)

## பாடசாலை புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை7

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் உதவியுடன் மண்கும்பான் அ.த.க பாடசாலை திருத்தப் செய்யப்படவுள்ளது.

இப்பாடசாலையினைத் திருத்தம் செய்வதற்காக மேற்படி தூதரகத்தினால் 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)


கணக்கீடு
திரு. பாலவாசன்
B.B.A. (F.M.Spl)
A/L 2002
தனி வியாபார
முடிவுக் கணக்கு
SAT, SUN 7-8 a.m.
A/L 2001
வருமானச் செலவுக்
கணக்கு
SAT, SUN 9-10 a.m
ஆரம்பம்: 08-07-2000
விக்னா
கல்வி நிறுவனம்
(76241)

ராஜா
(யாழ்ப்பாணம்)
ரஜனிகாந்த், சௌந்தர்யா,
ரம்பா, ரகுவரன்
நடித்த
அருணாச்சலம்
புதிய நேரம் 10.30, 2.00
(C/12143)

நாகம்ஸ்
சுன்னாகம்
கார்த்திக், ரோஜா
நடிப்பில்
உன்னிடத்தில்
என்னைக் கொடுத்தேன்
(ரீஸ்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30
(C/12162) (புதிய நேரம்)


# கொள்ளைச் சம்பவங்களைக் கண்டித்து அட்டாளைச்சேனையில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஜூலை7

மட்டக்களப்பு அட்டாளைச் சேனையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களைக் கண்டித்து அந்தக் கிராம மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

அண்மைக்காலத்தில் அந்தக் கிராமத்தில் 20க்கு மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

அந்தக் கொள்ளைகள் குறித்து விசாரணைகள் எதையும் பொலீஸார் மேற்கொள்ளாததைக் கண்டித்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என்றும் -

ஆயிரக்கணக்கானவர்கள் இதில் பங்குகொண்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், யாழ். மாநகர சபையின் முன்னாள் ஓய்வூதியத் தலைமை மேசனாரும் பிரபல்ய கட்டட சிற்பக் கலைஞரும் எனது அன்பு நண்பரும் மைத்துனருமான

### சின்னத்தம்பி சிவசம்பு (சின்னத்துரை)

அவர்கள் நேற்று (06-07-2000) வியாழக்கிழமை காலமாகிய செய்தி என்னையும் என் குடும்பத்தையும் அதிர்ச்சியுற வைத்தது. அன்னாரின் இழப்பினால் அவதியுறும் அவரின் குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த அனுதாபக் கண்ணீர் அஞ்சலிகள்.

*ஸ்ரீதாமனை,*
*சென். செபஸ்தியார் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

*- வி. மு. கந்தையா குடும்பத்தினர்*

(76250)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் **கந்தசாமி சிவபாலன்**

(ஆசிரியர், பளை மத்திய கல்லூரி)

அமரர் க.சிவபாலனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது ஆசிரியர் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிச் சங்கம்,
கிளி / பளை மத்திய கல்லூரி,
பளை.

(76236)

## 45 ஆம் நாள் நீங்கா நினைவஞ்சலி



அமரர **கந்தசாமி சிவபாலன்** (B.Com.)

(ஆசிரியர் - பளை மத்திய கல்லூரி)

நண்பா!
உனது பொன் சிரிப்பும்,
உனது சேவையினையும் பொறுக்க முடியாத காலன் உனை அழைத்து 45 நாள்களாகியும் 45 விநாடிகள் போன்றே உள்ளது. எல்லோரையும் கலங்க வைத்து விட்டு நீ நிம்மதியாய் தூங்கி விட்டாய்!

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*- நண்பர்கள்,*
பளை.

(76238)

## மரண அறிவித்தல்

### திருமதி கோணேசன் சிவபாக்கியம்

நாயன்மார்கட்டு அம்பாள் வீதியைச் சேர்ந்த திருமதி கோணேசன் சிவபாக்கியம் நேற்று (06-07-2000) வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோணேசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா (சின்னத்துரை) - தங்கம்மா ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி - முத்தாச்சி ஆகியோரின் மருமகளும் சண்முகநாதன், கணபதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரோகினி (கனடா), குகபாலன் (கனடா), ஸ்ரீபாலன் (கனடா), வசந்தி, சாந்தினி (கனடா), ஜெயபாலன் (பிரான்ஸ்), சிவபாலன் (கனடா), உமைபாலன் (அரியாலை - ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), தர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சற்குணதேவன் (கனடா), இந்திராதேவி (கனடா) தவகுலநாதன் (யாழ்/நயாற் திணைக்களம்), நல்லைநாதன் (கனடா) புஷ்பமாலா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், கிருஷன், கிரிதரன், கிருஷ்ணன், துசாரி, மகீபன், நிதீசன், அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-07-2000) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு தாவடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ.உமைபாலன (மகன்)
கு.தவகுலநாதன் (மருமகன்)
*15, அம்பாள் வீதி,*
*நாயன்மார்கட்டு.*

தற்காலிக முகவரி:
*அண்ணாமலை வீதி,*
*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*

(76242)

# வட - தென்கொரிய குடும்பங்கள் 50 ஆண்டுகளின் பின் சந்திப்பு!

சியோல், ஜூலை 7

ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக சந்திக்க முடியாமல் பிரிந்து இருந்த வடகொரியா மற்றும் தென்கொரியாவைச் சேர்ந்த குடும்பங்கள் எதிர் வரும் ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஒன்றிணைய உள்ளன.

இந்தத்திகதி 1945 இல் ஜப்பானிடமிருந்து கொரியா விடுதலை பெற்ற தினமாகும்.

கடந்த மாதம் பியாங்கொங் நகரில் வடகொரிய தலைவர் கிம் ஜொங்கில், தென்கொரியத் ஜனாதிபதி கிம் டேஜூங் ஆகியோர் கலந்து கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்திப்பின் போது பிரிந்து வாழும் கொரியக் குடும்பங்களின் இணைப்புக் குறித்து முடிவெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உணர்வுப் பூர்வமான இந்தச் சந்திப்புகளுக்கு இரு நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகள் ஏற்பாடு செய்து வருகின்றன.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஜப்பான் தோல்வியடைந்த போது அதன் ஆளுகைக்குக் கீழ் இருந்த கொரியா சுதந்திரமடைந்தது.

ஆனால் நேசநாடுகள் அணியிலிருந்த அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் ஆதிக்கப் போட்டியினால் 1948 ஆம் ஆண்டு கொரியா அமெரிக்க சார்புடையதாகவும் ரஷ்யசார்புடையதாகவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

அப்போது பிரிந்த குடும்பங்கள் இரு கொரியாக்களுக்கு இடையே தொடர்ந்து 50 ஆண்டுகளாக இருந்து வந்த பகைமையினால் உறவினரை நேரில் சந்திக்க முடியாமல் இருந்தன.

தற்போது அவர்களின் தவிப்புக்கு முடிவு ஏற்பட்டுள்ளது. (ஐ-ஓ)

# நாடாளுமன்றத்தை விட்டு கிளர்ச்சியாளர்கள் வெளியேற பிஜி படையினர் 2நாள் அவகாசம்

சுவா, ஜூலை 7

பிஜியில் கிளர்ச்சியாளர்கள் நாடாளுமன்றக்கட்டடத்தை விட்டு வெளியேற இரண்டு நாள் அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு இராணுவச் செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் கேணல் பிலிப்போ சாரக்கினிக்கினி அறிவித்துள்ளார்.

இது கிளர்ச்சியாளர்களுக்குக் கொடுக்கப்படும் இறுதி எச்சரிக்கை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 6 வாரங்களாகப் பதவி நீக்கப்பட்ட பிரதமர் மகேந்திர சௌத்ரி உட்பட 27 பேரை நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் தடுத்து வைத்துள்ள கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவம் கடும் நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருவதையே மேற்படி எச்சரிக்கை காட்டுவதாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில் —

நாடாளுமன்ற வளாகத்தை பாதுகாப்பு வலயமாக இராணுவம் அறிவித்திருந்ததைத்தொடர்ந்து அப்பகுதியில் குடியிருந்த குடும்பங்கள் விரைவாக வெளியேறிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ-ஓ)

## விமானக்கடத்தல் முறியடிப்பு

ஜோர்டானிய பயணிகள் விமானம் ஒன்றைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சியை பாதுகாப்பு அதிகாரிகள் முறியடித்துள்ளனர்.

ஜோர்டானிலிருந்து சிரியாவுக்குச் சென்றுகொண்டிருந்த விமானத்தை சிரியாவைச் சேர்ந்த பயணி ஒருவர் வெடிகுண்டை வெடிக்க வைத்து கடத்த முயன்றார். அவரைப் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டுக்கொன்று கடத்தலை முறியடித்ததாக விமானச் சேவை அதிகாரிகள் கூறினார்கள். (இ-ஓ)

## பேச்சுவார்த்தை

பெய்ஜிங், ஜூலை 7

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையேயான பாதுகாப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு குறித்த பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாக உள்ளன.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளுக்காக அமெரிக்கப் பாதுகாப்புத்துறைத் துணை அமைச்சர் ஜோன் கொலம் சீனா வந்துள்ளார் (இ-ஓ)

# இஸ்ரேல் பிரதமரை எதிர்த்து அமைச்சர் ஒருவர் ராஜினாமா!

டெல்அவிவ், ஜூலை 7

மேற்காசிய முத்தரப்பு உச்சி மாநாட்டில் பிரதமர் எகுட்பராக் கலந்து கொள்வதற்கும் —

அங்கு அரபாத்தைச் சந்திப்பதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலிய உள்துறை அமைச்சர் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

உச்சிமாநாட்டில் கையெழுத்திடப்படவுள்ள ஒப்பந்தம் இஸ்ரேலிய நலன்களைப் பாதிக்கும் சாத்தியம் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

இதுகுறித்து கருத்துக் கூறிய எகுட்பராக் உச்சிமாநாட்டில் இஸ்ரேலிய நலனுக்கு எதிரான எந்த ஒப்பந்தத்திலும் தான் கையெழுத்திடப் போவதில்லை என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் காம்ப் டேவிட் ஓய்வு தலத்தில்மேற்காசியமுத்தரப்பு மாநாட்டை நடத்த அமெரிக்கா ஏற்பாடு செய்துள்ளது. எகுட்பராக் மற்றும் யசீர் அரபாத் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளச் சம்மதித்துள்ளனர்.

அப்போது மேற்காசியப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இறுதிச் சமாதான உடன்படிக்கையில் இரு தலைவர்களும் கையெழுத்திடுவார்கள் என்று கூறப்பட்டு வருகிறது.

ஆனால் இஸ்ரேலிய அமைச்சரின் ராஜினாமாவால் மேற்காசிய சமாதானம் மீண்டும் தேக்க நிலையை அடையும் நிலை தோன்றியுள்ளதாகக் கருதப்படுகிறது. (ஐ-ஓ)

## உலக அரங்கில்

# 53 ஆம் ஆண்டுக்கு முந்தியநிலை காஷ்மீருக்கு தரப்படமாட்டாது!

## பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

சென்னை, ஜூலை 7

காஷ்மீர் மாநிலத்துக்கு 1953 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலை சுயாட்சி அதிகார நிலை மீண்டும் வழங்கப்படமாட்டாது என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேவைப்பட்டால் அதிக நிதி அதிகாரங்கள் தரப்படலாம் ஆனால் அதற்கு காஷ்மீர் மாநில அரசு வித்தியாசமான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் வாஜ்பாய் கூறினார்.

சுயாட்சித் தீர்மானம் நிராகரிக்கப்பட்டதால் முதல்வர் பரூக் அப்துல்லாவின் கட்சி கூட்டணியிலிருந்து விலகுமா? என்று கேட்டபோது ''அது



குறித்து முதல்வர் பரூக் அப்துல்லா தான் முடிவு செய்ய வேண்டும்'' என்றும் பிரதமர் வாஜ்பாய் கூறினார். (இ-ஓ)

## ஏழு தொழிலாளர் வெடிவிபத்தில் பலி

சென்னை, ஜூலை 7

விருதுநகர் அருகே பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 7 தொழிலாளர்கள் உடல் கருகி இறந்தனர். (இ-ஓ)

# பிலிப்பைன்ஸில் வெள்ளம்

மணிலா, ஜூலை 7

பிலிப்பைன்ஸில் வீசிய பயங்கர சூறாவளியால் 11 பேர் உயிரிழந்தனர் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வீடிழந்துள்ளனர்.

தலைநகர் மணிலா மற்றும் வடக்குப் பிரதேசங்களில் இந்தச் சூறாவளியினால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

மணிலாவின் முக்கிய வீதிகள் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன. அங்கு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அலுவலகங்கள் இயங்கவில்லை.

பலத்த காற்றும் மழையும் தொடர்ந்து நீடிப்பதால் நிவாரணப்பணிகள் சீராக நடைபெற முடியவில்லை என்று கூறப்படுகிறது. இதே காலநிலை தொடர்ந்தால் சேதமும் உயிரிழப்புகளும் அதிகமாகலாம் என்று அஞ்சப்படுகிறது. (ஓ)

# காஷ்மீர் பிரச்சினையின் பின்னணி!

உலகின் மிக உயர்ந்த பனிமலைத் தொடர்களால் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது காஷ்மீர்

14 ஆம் நூற்றாண்டுவரை இந்து மன்னர்களாலும் 1579க்குப் பின் மொகலாயர்களாலும் ஆளப்பட்டு வந்த காஷ்மீரில் 1819 இல் சீக்கிய அரசு உருவானது.

1846 இல் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்திய பிரிட்டிஷார் காஷ்மீரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பின்பு தமக்கு கீழ்ப்படிந்து நடக்கக்கூடிய ஜம்மு மன்னரிடம் காஷ்மீரை ஒப்படைத்தனர்.

இந்தச் சூழ்நிலையில் இந்து — முஸ்லிம் கலவரத்தின் பின்னர் பாகிஸ்தான் உருவானது. அத்துடன் 1947 ஓகஸ்ட் 15 இல் இந்தியா சுதந்திரம் பெற்றது.

அதே ஆண்டு செப்ரெம்பரில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் செல்வாக்குப் பெற்ற 'பதான்' என்ற இஸ்லாமிய இனக்குழு காஷ்மீரின் மீது படையெடுத்தது. அதுமட்டுமல்லாமல் மேற்குக் காஷ்மீரில் முஸ்லிம்கள் கிளர்ச்சியில் இறங்கினார்கள்.

மகாராஜா ஹரிசிங் இந்த ஆபத்தைச் சமாளிக்க இந்தியாவின் தயவை நாடினார். காஷ்மீரில் பெரும்பான்மையாக வாழ்ந்த முஸ்லிம்களின் மதிப்பு மிக்க தலைவராயிருந்த — தற்போதைய முதல்வர் பரூக்அப்துல்லாவின் தந்தை — ஷேக் அப்துல்லா அப்போதைய இந்தியப் பிரதமர் நேருவிடம் காஷ்மீருக்கு உதவும்படி வேண்டிக்கொண்டார். ஆனால் நேருவோ காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்தால்தான் உதவ முடியும் என்றார்.

இதனால் 1947 ஒக்ரோபர் 27 இல் மகாராஜா ஹரிசிங் இந்தியாவுடனான இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் அதன் பின்னரே இந்திய இராணுவம் காஷ்மீர் சென்று பதான்களை விரட்டியடித்தது. ஆனாலும் தாம் கைப்பற்றிய காஷ்மீரின் ஒரு பகுதியை 'ஆசாத் காஷ்மீர்' என்ற பெயரிட்டு பாகிஸ்தானுடன் பதான்கள் சேர்த்துக் கொண்டதை இந்தியாவால் தடுக்க முடியவில்லை.

அதுவரை இந்தியாவுக்கு காஷ்மீரால் தொல்லைகள் இருக்கவில்லை.

இணைப்பு ஒப்பந்தத்தின் விதிகள் இந்தியாவின் அரசமைப்பு காஷ்மீரை முற்றாகக் கட்டுப்படுத்தாமல் இருக்கும்படி மகாராஜா அமைத்துக் கொண்டதும் —

அப்போது பிரிட்டிஷாரின் இந்தியப் பிரதிநிதியான (வைஸ்ராய்) மவுண்ட்பேட்டன் இணைப்புப் பற்றிய அறிக்கையில், ''படைபெடுப்பாளர்கள் அகற்றப்பட்டதும் காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இணைப்புக் குறித்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது விருப்பம்'' என்று கூறியிருந்ததுமே இந்தியாவின் தலைப்பகுதியிலிருக்கும் காஷ்மீர் தீராத தலைவலியாக மாறியதற்கு மூலகாரணம்.

இணைப்பு ஒப்பந்த விதிகளினால் இந்திய மாநிலங்களில் தனியான மாநில அரசமைப்பு கொண்டிருக்கும் உரிமை காஷ்மீருக்குக் கிடைத்தது. அதனால் காஷ்மீரிகள் அல்லாதோர் அங்கு நிலம் சொந்தமாக வாங்கமுடியாதது போன்ற பல விசேட அந்தஸ்துகள் காஷ்மீருக்குக் கிடைத்தன.

ஆனால் மவுண்பேட்டனின் அறிக்கையைச் சுட்டிக்காட்டி தான்களால் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரின் பகுதிகள் மீட்கப்படவில்லை என்று கூறி சர்வஜன வாக்கெடுப்பை தள்ளிப்போடும் வசதி இந்தியாவுக்குக் கிடைத்தது.

இந்நிலை நீடித்து வந்தபோது 1963 இல் ஷேக்அப்துல்லாவுக்கும் நேருவுக்கும் முரண்பாடுகள் உச்சநிலையை அடைந்தன. விளைவு, ஷேக்அப்துல்லாவின் நீண்ட காலச் சிறைவாசம்.

அதுவரை மக்களை கட்டுக்குள் வைத்திருந்த ஷேக்அப்துல்லா இல்லாததால் 1964 இல் தீவிரவாதக் குழுக்கள் காஷ்மீர் மண்ணில் தலைதூக்க ஆரம்பித்தன. அவற்றோடு பிரச்சினைகளும் வளர்ந்தன.

1982 இல் ஷேக்அப்துல்லாவின் மறைவுக்குப் பின் மகன் பரூக் அப்துல்லா முதல்வரானார்.

ஆனால் அதற்குள் இஸ்லாமிய ஆதரவுச் சக்திகளின் துணையோடு தீவிரவாத இயக்கங்கள் நன்கு வேரூன்றி விட்டதால் பிரச்சினை பெரும் மரமாக கிளை பரப்பி நின்றது. இன்று பாகிஸ்தானுடன் இணைய வேண்டும் என்று சில தீவிரவாதக்குழுக்களும் தனியாக ஆட்சி செய்வோம் என்றுவேறு சில குழுக்களும் சுயாட்சி அதிகாரத்தோடு இந்திய மாநிலமாக இருப்போம் என்று அரசியல் கட்சிகளும் சோரி வருகின்றன.

இவர்களின் சத்தங்களிடையே நிம்மதியான வாழ்வு வேண்டும் என்ற அப்பாவி பொதுமக்களின் குரல் அமுங்கிப்போவதுதான் காஷ்மீரின் இன்றைய சோகம். (ஓ)

# இந்தியாவில் அபூர்வப் புலிகள் திடீர் மரணம்

புவனேஷ்வர், ஜூலை 7

குஜராத் நந்தன்கானன் வனவிலங்குப் பூங்காவில் 10 அபூர்வவகைப் புலிகள் திடீரென்று இறந்துவிட்டன. மேலும் ஏழு புலிகளின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

இறந்த புலிகளில் 2 வெள்ளைப் புலிகளும் அடங்கும். நேற்று முன்தினம் மூன்று புலிகள் இறந்தன. அவை இறந்ததற்கான காரணம் கண்டுபிடிக்கப்படாத நிலையில் தொடர்ந்து ஒவ்வொரு புலியாக உயிரிழந்தன.

புலிகளின் திடீர் மரணம் குறித்து விசாரிக்க மத்திய அரசு 6 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது.

மிகவும் அபூர்வ வகையைச் சேர்ந்த புலிகளின் இறப்பு மிகவும் பாரிய இழப்பாகும் என்று விலங்கு பாதுகாப்பு ஆர்வலர் மேனகா காந்தி தெரிவித்தார்.

கால்நடை மருத்துவர்கள் குழு ஒன்று பூங்காவில் முகாமிட்டு மற்றப்புலிகளைக் காப்பாற்ற தீவிர முயற்சி எடுத்து வருகிறது. (இ-ஓ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தரும், நலன்புரிச் சங்கத்தின் கணக்காய்வாளருமான

**திரு. இளையவன் கிட்ணமூர்த்தி**

(தவரத்தினம்)

அவர்கள் நீதி, அரசமைப்பு, இனவிவகார அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமையையிட்டு மனதார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

-நலன்புரிச்சங்கம்

விலைமதிப்பீட்டுத் திணைக்களம்,
யாழ்ப்பாணம். (76239)

யாழ். மாவட்ட

**சி. க. வ. கூ. சங்கங்களின் சமாசத்தின்**

சாவகச்சேரி பிராந்திய சபை விடுத்துள்ள

## முக்கிய அறிவித்தல்

மேற்படி பிராந்தியத்துக்கு உட்பட்ட பரிசூதியம், மரணசகாயம் செலுத்தும் சங்கங்களை இல. 637 K. K. S. வீதியில் இயங்கும் தலைமைக் காரியாலயத்தில் சாவகச்சேரி பிராந்திய வெளிக்கள உத்தியோகத்தர் திரு. கோ கௌரிதாசனைச் சந்திக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம். அத்தோடு ஏனைய சங்கங்களும் தமது தலைவர், செயலாளரது தற்போதைய முகவரியை அறியத்தரவும்.

பி. சுகுமாரன்
சாவகச்சேரி,
பிராந்திய சபைத்தலைவர்.

(70247)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பீட விரிவுரையாளரும் எமது சங்க உறுப்பினருமான

திரு. சுப்பிரமணியம் உதயதாஸ்
அவர்களின் அன்புச் சகோதரி

**கலா சுப்பிரமணியம்**

அவர்கள் கடமைக்காகக் காத்திருந்தவேளை காலனவன் அவசரமாய்ச் சுமந்து சென்றதால் கலக்கமுற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**விவசாயபீட ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**யாழ்.பல்கலைக் கழகம்**

(76243)

சாவகச்சேரி
**லயன்ஸ் கழகம்**

## பதவியேற்பு வைபவம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 2000/2001 ஆண்டுக்கான நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம்

எதிர்வரும் **09-07-2000** ஞாயிறு
காலை 9.00 மணிக்கு

யாழ். கோயில் வீதி, 75 ஆம் இலக்க பணிமனையில்
நடைபெறவுள்ளது

கழக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்

★ ★ ★ ★

மாவட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டில்
யாழ். மாவட்டத்தில் பரிசு பெற்றோர் விவரம்:

5 ஆவது பரிசு வி. தவமணிதேவி
(டிக்கெட் இல. 49843)

6 ஆவது பரிசு எஸ். பாலகிரியா நிகரவதீ
சங்கானை.

ஆறுதல் பரிசு:

1. வி. சின்னத்தம்பி டச்சு வீதி, சாவகச்சேரி.
2. ஆர். அந்தோனி 115, ஏ. வி. வீதி,
அரியாலை, யாழ்.

செயலாளர்.

லயன்ஸ் கழகம்,
சாவகச்சேரி.

(சி/12160)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம்—வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி (பன்றிக்கோட்டுப்பிள்ளையார்) ஆலயதீர்த்தோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

(க)

★ ★ ★

நெல்லியடி, ஜூலை 7

மாலுச்சந்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம் பெறும்.

(க-109)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 7

அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒன்பது தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் காலை 7.30 மணிக்குத் திருநாள் திருப்பலியும் இடம்பெறும்.

(க)

★ ★ ★

சுழிபுரம், ஜூலை 7

சுழிபுரம் குடியிருப்பு ஓடையர்பதி ஸ்ரீ பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர தேவஸ்தான இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளி காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து சிற்பக் கலைஞர் விசுவநாதர் தம்பிராஜாவுக்கு 'சிற்பக்கலைமாமணி' எனும் விருது வழங்க பதக்கம் சூட்டி பாராட்டு விழாவும் இடம்பெறும்.

(க-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 7

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை காலை 10.54 மணி முதல் 11.59 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை முதல் கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 7

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய திருவிழாவுக்கான ஆயத்த நவநாள் வழிபாடுகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை வரையான நாள்களில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஆனி உத்தர தினமான இன்று வெள்ளிக்கிழமை கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் ஆருத்ரா தரிசனம் நடைபெறும்.

அதிகாலை 4 மணிக்கு நடராஜருக்கு ஆனி உத்தர கலச அபிஷேகம் இடம்பெறும்.

(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 7

சுழிபுரம் கிழக்கு நெல்லியான் வைரவர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும். (க-28)

## தென்மராட்சிப் பாடசாலைகள் வலிகாமம் கல்வி வலயத்தில்

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகள் பலவற்றை வலிகாமம் கல்வி வலயத்தில் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை கல்விப் பகுதியினர் செய்துள்ளனர்.

கோண்டாவில் நிரு கல்வி நிலையம், வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயம், அராலி சரஸ்வதி வித்தியாலயம் என்பவற்றில் காலைநேர பாடசாலைகளாகவும்—

இணுவில் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி, சுளிபுரம் விக்டோரியா கல்லூரி, சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் என்பனவற்றில் மாலை நேரப்பாடசாலைகளாகவும் தென்மராட்சியைச் சேர்ந்த பாடசாலைகள் தற்போது இயங்கிவருகின்றன.

(ஐ-152)

## போரூட் நிறுவனத்தினால் மலசல கூடங்கள் அமைப்பு

நெல்லியடி, ஜூலை 7

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து புலோலி தெற்கு சிங்கைநகர் பனம்பொருள் பல்தொழில் தொகுப்புக் கட்டடத்தில் தங்கியுள்ள சுமார் 250 பேரின் நலன்கருதி 'போரூட்' நிறுவனம், 60 ஆயிரம் ரூபா செலவில் மூன்று மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளது.

மந்துவில், கொடிகாமம், மட்டுவில் பகுதிகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள், மலசல கூடம் இன்றி இயற்கைக் கடன்களைக் கழிக்க பெரும் இன்னலடைந்து வந்தனர்.

இதனைக் கருத்திற் கொண்டு, சிங்கைநகர் உதய சூரியன் சன சமூக நிலையத் தலைவர் லயன் வி. ஜீ. தங்கவேல், போரூட் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டதையடுத்தே புதிய மலசல கூடங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இங்கு தங்கியிருக்கும் கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் ஆகியோரின் போஷாக்கைக் கருத்திற் கொண்டு பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவினால் தினமும் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

அதேசமயம் —

இடம் பெயர்ந்துள்ளவர்கள் தங்கியுள்ள இடங்களில் யுனிசெவ் நிறுவனத்தினால் மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்த மலசல கூடத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இத்தகைய மலசல கூடங்கள் தொடர்பான பட்டியல்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் பிரதேச செயலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

(ஓ [illegible])

## ஆசிரியர்களை சமுகமளிக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 7

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து இதுவரை பாடசாலைகளில் கடமைக்குச் சமுகமளிக்காத தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்கள் உடனடியாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கும் வலய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குரிய தற்காலிக இணைப்பு பாடசாலைகளைப் பெற்று கடமையாற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(இ-117)


## அகதிகள் முகாமில் உள்ளவர்களுக்கு ஞாயிறு தோறும் இலவச மருத்துவ சிகிச்சை

பருத்தித்துறை
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
25-06-2000 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம்
டாக்டர் M யோகேஸ்வரதேவன்
அவர்களுடைய உதவியுடன்
இச்சேவையை ஆரம்பித்துள்ளது.

25-06-2000; -
தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

02-07-2000; -
பொன்னம்பல மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

09-07-2000

குடத்தனை கிறிஸ்தவ தேவாலயத்தில்
இம்மருத்துவசேவை நடைபெற உள்ளது.

கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் உபதலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகனானந்தர் மகராஜ் எங்கள் சேவைக்கு நன்கொடை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- செயலாளர்

(சி/12161)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
எஸ். சசிக்குமார் அவர்களின் தந்தையார்

**எஸ். சிவானந்தம் அவர்கள்**

கொழும்பில் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

18 ஆம் அணி மாணவர்கள்,
யாழ். மருத்துவபீடம்.

(76246)

## உதயன்

### நூதனமானது!

சமாதான அமைப்புக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் ஒரு கோரிக்கை! இது மிகவும் நூதனமானதுதான்.

பாவனைப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவேண்டும்; சம்பள உயர்வு தரவேண்டும் என்பன போன்ற சாதாரண கோரிக்கைகள் போன்றே மேற்படி கோரிக்கையும் தொனிக்கிறது. எனினும் இரண்டு வகைகளும் ஒப்பிடக் கூடியன அல்ல.

பல்லின, பல சமய மக்கள் வாழும் நாட்டில் குடிமக்கள் சகலரும் சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழ்க்கை நடத்துவதற்கு சமாதானம் மிக இன்றியமையாதது. சமாதானம் இல்லாத நாட்டில் சகல வகை வளர்ச்சிகளும் முன்னேற்றங்களும் தடைப்படும். மக்கள் மத்தியில் நல்லுறவும் செளஜன்யமும் உருவாகமாட்டா. அதனால் நாட்டில் குழப்பங்களும் மோதல்களும் மலிந்து நாடு எப்போதும் கொந்தளித்துக் கொண்டேயிருக்கும். மக்கள் இயல்பு வாழ்க்கை நடத்த முடியாது.

இலங்கையில் நாம் இப்போது அதனையே நேரில் தரிசிக்கின்றோம். இதற்குக் காரணமானவர்கள் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் 'வாய்த்த' அரசியல் தலைவர்களே. பல இன மக்களையும் ஒற்றுமையுடனும் நல்லுறவுடனும் வலம் வருவதற்கு வகை செய்யும் சிந்தனை அவர்களிடம் இருக்கவில்லை. மாறாக அவர்களிடையே வேற்றுமையை உருவாக்கி வளர்த்து தமக்கு வாக்குப்பலம் சேர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். காலத்துக்குக் காலம் தப்பாது மக்களைத் தவறாக வழிநடத்தவும் செய்தனர்.

மிகக் குறிப்பாக, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், இந்த நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் சம அந்தஸ்துடன், சம உரிமைகளுடன் வாழ வேண்டும் என்று பரந்த நோக்கமற்றவர்களாகச் செயற்பட்டனர்.

சிங்கள மக்கள் ஏனைய மக்களை விட அதிக உரிமைகளுடனும், முழு அதிகாரத்துடனும் வாழ வேண்டும்; சிங்களவர்கள் ஆளும் இனமாகவும் ஏனையோர் ஆளப்படுவோராகவும் இருக்க வேண்டும் என்ற நஞ்சான கருத்தே அவர்களிடம் வேரூன்றி இருந்தது. அதனையே அவர்கள் முழுக்க முழுக்க வெகு மும்முரமாகச் செயற்படுத்தினர்.

1956 ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டம் தொடக்கம் 1978 ஆம் ஆண்டின் அரசமைப்புச் சட்டம் வரை இந்த நாடு சிங்களவருக்கு மட்டுமே சொந்தம் என்ற கருத்தின் செயல் வடிவங்களே. இத்தகையவற்றின் விளைவுகளே இன்றைய போரும் அமைதி இன்மையும். இனப்பிரச்சினை தோன்றியதற்கும் அதற்குத் தீர்வு காணப்படாதிருப்பதற்கும் காரணங்கள் இவையே.

இன்றைய சந்தர்ப்பத்தில், போர்நிறுத்தப்பட்டாலேயே, இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான தீர்வு காணப்பட்டால் மட்டுமே நாட்டில் சமாதானம் திரும்பும். சமாதானத்துக்காக குரல் கொடுப்போருக்கும் அதனை நாடிச் செயற்படுவோருக்கும் ஊக்கமளிப்பதற்கும் ஆதரவு நல்குவதற்கும் மாறாக அவர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படும் நிலை மிகவும் பாதகமானது; பயங்கரமானது.

அதனாலேயே சமாதான அமைப்புகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. சிங்கள மக்கள் அனுபவிக்க உரித்துடைய உரிமைகள் ஏனையோருக்கும் கிடைக்க வேண்டும்; வழங்கப்பட வேண்டும் என்ற உணர்வு சிங்களத் தலைவர்களுக்கும், (அவர்கள் மூலமாக) சிங்கள மக்களுக்கும் பிறக்கும் வரை, சமாதானம் வெறும் மேனிமினுக்குச் சொல்லாகவே தொடர்ந்தும் இலங்கையில் வழக்கில் இருக்கும்!

---

'உதயனை' தடை செய்தது

# ஜனநாயகத்தின் குரலை ஒடுக்கியது போன்றதாகும்

## யாழ். ஆயர் ஜனாதிபதிக்கு கடிதம்

'உதயன்' பத்திரிகையைத் தடைசெய்தது மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தைத் தடை செய்து ஜனநாயகத்தின் குரலையே ஒடுக்குவது போலாகும்" யாழ். ஆயர் அதிவண. தோமஸ் செளந்தரநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும், தொடர்புச் சாதன அமைச்சருக்கும் அவர் அனுப்பியிருந்த கடிதத்திலேயே ஆயர் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உதயன் பத்திரிகை தடை செய்யப்பட்டதை அறிந்து கவலை அடைகின்றோம் உதயன் பத்திரிகை மீதான தடையினை யாழ் நிலையினைக் கருத்தில் கொண்டு உடனடியாக நீக்கும்படி வேண்டுகோள் விடுக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோது மக்கள் பயத்திலும் பீதியிலும் இருக்கிறார்கள். எங்கே என்ன நடக்கிறது என்ற செய்திகளை அறிய ஆவலாகவும் அந்தரமாகவும் மக்கள் இருக்கின்ற வேளையில் இச்சேவையை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்த இப்பத்திரிகையைத் தடைசெய்வது மக்களின் அடிப்படை சுதந்திரத்தைத் தடைசெய்து ஜனநாயகத்தின் குரலையே ஒடுக்குவது போலாகும்.

மக்களின் தேவையை அறிந்து இந்த இக்கட்டான நேரத்திலும் மகத்தான பணி புரிந்து வரும் உதயன் பத்திரிகை மீதான தடையை நீக்கி அவர்கள் தொடர்ந்து பணிபுரிய உடன் வழி சமைக்கும் படி வேண்டுகோள் விடுக்கிறோம் - என்றுள்ளது. (ஐ-3)

---

# உலகத் தமிழரின் பிரார்த்தனையால் 'உதயன்' தடையின்றி வெளிவரட்டும்

## அகில இலங்கை திருமுறை மன்றம்

உலகத் தமிழ் மக்களின் பிரார்த்தனையால் மீண்டும் வெளிவந்துள்ள உதயன் தடையின்றித் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று அகில இலங்கைத் திருமுறை மன்றம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாற்பத்தைந்து தினங்களாக ஆசிரிய பீடத்தின் அயராத முயற்சியினாலும், இயக்குநர் திலகத்தினால் இடைவிடாது எடுக்கப்பட்ட பல அழுத்தமான நடவடிக்கைகளாலும், கொழும்பில் பலரது ஒத்துழைப்பு நல்கிய முயற்சியினாலும், இன்றைய பத்திரிகையின் நிர்வாகிகளின் கடிதத்தின்படி உலகில் வாழ் தமிழ் மக்களின் பிரார்த்தனையின்படியும் இன்று வெளிவந்த உதயனை மனமார வாழ்த்துகின்றோம். இனியும் தடையின்றி வெளிவர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மண்ணிலிருந்து வெளிவரும் 'உதயனுக்கு' இந்த நெருக்கடியான காலகட்டத்தில் சிறப்பான செய்திகள் பலவற்றை வெளியிட்டமைக்காக விசேட கௌரவ விருதைப் பெற்றுக்கொண்டமைக்கும், ஏற்கனவே பல விருதுகளைப் பெற்றமையை இட்டும் பெருமகிழ்வு அடைவதோடு, நாற்பத்தைந்து தினங்கள் வெளிவராது செய்த அரசிடம் இதற்கான நஷ்டஈட்டைப் பெற வலுவான முயற்சி எடுக்கும்படி கேட்டுக் கொள்வதுடன் இவை கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது. (ஐ-3)

---

சிங்கள ம.வித்தியாலயம் அருகே

# பயணிகள் சோதனை நிலையம் 4 லட்சம் ரூபா செலவில் அமையும்

யாழ்ப்பாணம்,ஜூலை7

குடாநாட்டிலிருந்து தென் பகுதிக்குச் செல்லும் விமானப் பயணிகளைச் சோதனையிடுவதற்கான புதியசோதனை நிலையமொன்று யாழ். நகரில் சிங்கள மகாவித்தியாலய வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் 5லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மேற்படி நிலையத்துக்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமாசத் தொழிலாளர்கள் படையினரின் பகுதிக்குள் சென்று வேலைகளை ஆரம்பிப்பதற்கான பாதுகாப்பு அனுமதி கிடைக்கப்பெற்றதும் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பமாகும் என்று சமாசத் தலைவர் ரீ.தவரட்ணம் தெரிவித்தார்.

இந்த நிலையத்தில் பயணிகள் சென்று அமர்வதற்கான இருக்கைகள், பயணிகள் எடுத்துச்செல்லும் பொருள்களைப் பாதுகாப்புப் பிரிவினர் சோதனை செய்வதற்கான மேசை மற்றும் மலசலகூட வசதிகள் என்பன இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

---

# சிப்பாய் ஒருவரை பயிற்றுவிக்க நான்கு லட்சம் ரூபா செலவு!

## அனுருத்த கூறுகிறார்

கொழும்பு,ஜூலை7

இராணுவ சேவையில் இணைந்து முழுமையான பயிற்சிபெற்ற சுமார் 20 ஆயிரம் படையினர் இராணுவத்தை விட்டுத் தப்பியோடியுள்ளனர் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இராணுவச் சிப்பாய் ஒருவரைப் பயிற்றுவிக்க அரசாங்கம் 4லட்சம் ரூபாவைச் செலவிடுகின்றது. இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் நாட்டுக்காகப் பணியாற்ற வேண்டும். எனவே இராணுவத்தை விட்டுத் தப்பியோடியவர்கள் மீண்டும் திரும்பிவந்து தமக்கு அளிக்கப்பட்ட பயிற்சி மூலம் இந்த இக்கட்டான நிலையில் உதவ வேண்டும்.

இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-7)

### கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் தற்போதைய நிலைவரம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் நடத்தவுள்ளார். (ஐ-5)

### சிரஞ்சீவியாக வாழி!

மெய்தரும் அறிவு கூட்டும்
விளக்கென யாழ்ப்பாணத்தின்
செய்தொழில் வளம் சிறக்க
தெய்வீக நலம் சிறக்க
உய்வகை கை கொடுக்கும்
உதயன் பேர் தாங்கி நிற்கும்
செய்தித்தாள் தினகரன் போல்
சிரஞ்சீவியாக வாழி!

- அருட்கவி சீ. விநாசித்தம்பி

### 'கிரணம் விலகியது'

கருமேகம் சிலநொடிகள்
கதிரவனை மறைக்கும்
இருள் சூழும் இதுவியல்பு
எவர்க்குமிது புரியும்
வருமொளியில் சிறுபொழுது
கருமையது சூழின்
கதிரவனே இலையென்று
கருதுவது தகுமா?

கிரகண நிகழ்வுதனில்
கதிரினொளி மறையும்
விலகிவரும் வேளைதனில்
பல மடங்கு வீசும்
உதயவனும் சிலபொழுது
கிரணமதில் மறைந்தான்
அவனுதயம் எந்நாளும்
அயராது தொடரும்!

– புத்தூர் வே.இளையகுட்டி

---

# இம்மையிலும் மறுமையிலும் நற்பயன் தரும் ஆனிஉத்தரம்

இன்று ஆனி உத்தர நன்னாள். இந்த நாள் சைவப் பெருமக்களால் விசேஷமாகக் கொண்டாடப்படும் மகிமை வாய்ந்தது.

இந்த நாளில் தான் இறைவன் சிவகாமி அம்பாள் சமேதரராகக் காட்சி கொடுத்து அன்பர்களையும், அடியார்களையும் உய்விக்கும் பொருட்டு திருநடனம் ஆடிய சிறப்பு கைவரப் பெற்றது.

முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் இறைவனின் திருக்கோலத்தைக் காண இந்த ஆனிஉத்தர நாளையே தேர்ந்தெடுத்துள்ளனர்.

ஈழத்துச் சிதம்பரம் எனவிளங்கும் காரைநகர்ச் சிவன் கோயிலிலும் இந்த ஆனி உத்தரத் தரிசனத்தைக் காணலாம்.

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டு பஞ்சகிருத்தியங்களைச் செய்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலான ஐந்தொழில்களும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் எனும் மூர்த்திகளைக் கொண்டு இயற்றப்படுகின்றன.

"கோயில்" என்பதற்குச் சிறப்பாக எடுத்துக் கூறும் ஸ்தலம் சிதம்பரம். இந்தச் சிதம்பரத்திலேயே ஆனி மாத மஹோற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுவது வழமை.

இந்தவிழாவில் தீர்த்தோற்சவம் ஆனி உத்தரத்தன்று வரும். இந்நாளில் தில்லை நடராஜனின் தரிசனத்துக்காக அடியார்கள் அதிகாலையிலே கூடிவிடுவார்கள்.

ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விஷேச அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அடியார்களுக்கு அருட் காட்சி நல்குவதற்காக எம்பெருமான் ஆனந்த நடனஞ் செய்து வீதியுலா வருங்காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

நடராஜப்பெருமானின் ஆனந்த தாண்டவத்தைக் காண்பதற்காக பக்தர்கள் வெள்ளம் போல கூடிவிடுவார்கள். ஜன சமுத்திரத்தின் நடுவே எம்பெருமான் நடனமாடி வருவார். இன்றைய ஆனி உத்தர நன்னாளில் அந்தத் தரிசனம் காண்பதற்கு பூர்வ புண்ணியம் செய்திருக்க வேண்டும். அனுபவித்தவர்களுக்குத்தான் அந்த உண்மை புரியும்.

இந்நாளில் விரதமிருந்து சிவ நாமாவளிகளைப் பாராயணஞ் செய்து சிவபெருமானைப் பூஜிப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நற்பயன் அடைவார்கள்.

"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்பது போல இறைவன் ஆடுகின்றான். நாம் அவனுடைய ஆட்டத்தின் பேரருட் கருணையினால் பூவுலகில் சதுர்வித புருஷார்த்தங்களை அனுபவிக்கின்றோம்.எனவே இந்தப் பூவுலகில் மானிடப்பிறவி எடுத்த நாம் இந்த ஆனி உத்தர தரிசனத்தைப் பெற்று ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.

*குனித்த புருவமும் கொவ்வைச்*
*செவ்வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல்*
*மேனியிற் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்த*
*பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனிதப்பிறவியும் வேண்டுவதே*
*இம்மாநிலத்தே.*

### நாளை

ஆனி 24
சனிக்கிழமை
*திதி:* ஷஷ்டி
நண்பகல் 12.31 வரை
*நட்சத்திரம்:* அத்தம்
பின் இரவு 12.57 வரை
*சுபநேரம்:* 2.58 - 4.28
*ராகுகாலம்:* 8.58 - 10.28

### உதய வாக்கு

சண்டை போட உபயோகப்படும் ஆயுதங்களைக் காட்டிலும் பயங்கரமான ஆயுதம் நாக்கு. நாக்கை அடக்கிப் பேசாவிட்டால், பெரும் ஆபத்து ஏற்படும்.

- நேரு

### *மாணிக்கத்தேரேறி வருக! வாழ்க!!*

பொன்னரசின் மன்னவனாய்ப் புவிமேல் எங்கும்
பொங்குமொளித் தங்கமுறும் செங்கோல் தாங்கும்
மின்னுமணி மகுடமணிக் கதிரின் செல்வா
மேகமிரு ளாகவொளித் தெங்கே சென்றாய்?
இன்னல்தமைச் சுமக்கமுடி யாதே சோகம்
இதயமெலாம் ஏர்பூட்டி உழுதிட்டாயே
கன்னல்மொழி ஒளிமறைத்தே மௌனம் காத்தாய்
கண்ணீரின் நதியினிலே மிதந்தோம் ஐயா

பணம் பட்டம் பதவிபுகழ் ஆசை எல்லாம்
பகற்கனவே என்றுணரத் தாய்ப்பால் வார்த்தாய்
கணப்பொழுதும் நழுவாதே காத்தே நந்திக்
காலத்தின் வரலாற்றுச் செய்திக் கோலம்
உணர்த்திடு நின் உரைகளிலே உள்ளந் தோய்ந்தோம்
உண்மைக்கோர் உரைகல்லாய் ஒளிர்ந்த சோதிக்
குன்றதுவே சுடர்மறைவால் நெஞ்சம் வெந்தே
குமுறியகுக் குரல்கேட்டோ பறந்தே வந்தாய்

நந்தவனப் பொன்மலர்கள் இதழ்விரித்தே
நடமாடித் தென்றலிலே நறுமணந் தேன்
சிந்தியதுங் களிகூரக் தடங்கள் தோரணம்
செங்கமலம் விளக்கேற்றச் சேவல் கூவிச்
சுந்தரனே வந்தருள்வாய் எனப்பாராட்டச்
சொர்ணமென முத்தமிழின் சோதிகால
மைந்தர்களெல்லாம் சிந்தையெலாம் மகிழ்ச்சி தேங்க
மாணிக்கத் தேரேறி வருக வாழ்க!

- எம்.வி.

## அதிரடி அரங்கு

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கல்வி நிர்வாகத்தைப் பொறுத்தவரை ஒன்பது மாவட்டங்கள் உள்ளன. அவை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை.

இந்த ஒன்பது கல்வி மாவட்டங்களும் சேர்ந்துதான் வடக்கு - கிழக்கு மாகாணம் என்பதனை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மறந்து பல வருடங்களாகிவிட்டன.

நீண்டகாலமாக மாகாண மட்ட தமிழ்த்தின, ஆங்கிலத் தினப்போட்டிகள், மெய்வன்மை மற்றும் உதைபந்தாட்டம், கிரிக்கெட், வலைப்பந்தாட்டம் போன்றவை அடங்கிய பிரதான விளையாட்டுப் போட்டிகளைக் "குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல" ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டும் நடத்திவிட்டு சான்றிதழ்களையும் பரிசுகளையும் வழங்கித் திருப்திப்பட்டுக் கொள்கின்றது மாகாணக் கல்வி அமைச்சு.

உதாரணத்துக்கு மாகாணக் கல்வி அமைச்சு இம்முறை நடத்தி முடித்திருக்கும் தமிழ்த்தின, ஆங்கிலத் தின, மெய்வன்மை மற்றும் விளையாட்டுப் போட்டிகளை எடுத்துக்கொள்வோம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் முழுப் பிரதேசங்கள், மன்னார் மற்றும் வவுனியாவின் பெரும்பகுதி, திருகோணமலையில் (மூதூர், கூனித்தீவுப் பகுதிகள் போன்றவை அடங்கிய) கணிசமான பிரதேசம், மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பெரும்பகுதி ஆகியவற்றைத் தவிர்த்துவிட்டு -

அதாவது வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சுமார் 75 சதவீதமான பிரதேசப் பாடசாலைகளைத் தவிர்த்துவிட்டு -

எஞ்சிய பிரதேசப் பாடசாலைகளில் இருந்து வரும் மாணவர்களுக்கு மட்டும் போட்டிகளை நடத்தி, மாகாண ரீதியிலான சான்றிதழ்களை அந்த மாணவர்களுக்கு வழங்கித் தமக்கு மேலுள்ளவர்களின் பாராட்டுக்களைப் பெற்று திருப்திப்பட்டுக் கொள்கின்றார்கள் மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள்.

தரம் மிக்க, சாதனை புரியக்கூடிய மாணவர்கள் வெளியே நிற்க - அவர்களுக்குப் போட்டியில் பங்குபற்ற வாய்ப்பளிக்காமல் தடுத்துவிட்டு - ஒரு பகுதியினருக்கு மட்டும் வாய்ப்பும் பரிசும் அளிக்கும் ஓரவஞ்சனை கடந்த பத்து ஆண்டுகளுக்கும் அதிகமாகத் தொடர்கின்றது - தட்டிக் கேட்க ஆளில்லாதபடியால்.

வேலை வாய்ப்புகளுக்கு மட்டுமல்லாமல் பல் லைக்கழக அனுமதிக்கான மேலதிகப் புள்ளிகளைப் பெற்றுக்கொடுப்பதில் கூட மாகாண மட்டச் சான்றிதழ்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்த விடயத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பெரும் பிரதேசத்தில் வாழும் மாணவர்களின் பிரதிநிதித்துவம் தொடர்ந்து ஒரு குறுகிய பிரதேசத்தில் உள்ள மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்படுவது அநீதியிலும் அநீதி.

* * *

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் இந்தா, அந்தா என்று 'சிற்றி ஓவ் ரிங்கோ' பயணிகள் கப்பல் சேவையிலீடுபட்டு வருவது தெரிந்ததே.

அதற்கு ஒரு டிக்கெட் பெறுவது என்றால் அது மணலைக் கயிறாகத் திரிக்கும் முயற்சி.

ஒரு தடவையில் மொத்தம் 350 பேர் பயணம் செய்யலாம். அதில் நூறு டிக்கெட்டுகள் வடமராட்சிப் பகுதிக்கு வழங்கப்படுகின்றன. எஞ்சிய இருநூற்றியைம்பதும் யாழ்ப்பாணத்தில் வைத்து விநியோகிக்கப்படுவது வழமை.

இந்த 250 டிக்கெட்டுகளில் 35 டிக்கெட்டுகள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழு கட்சிகள் மற்றும் தமிழ்க் குழுக்களுக்கு கோட்டாவாக வழங்கப்படுகின்றது.

அதாவது ஒவ்வொரு கப்பலுக்கும், பயணம் செய்வதற்கான பாதுகாப்பு அனுமதி பெற்றவர்களில் மேற்படி கட்சிகள் ஒவ்வொன்றும் சிபாரிசு செய்யும் ஐவருக்கு டிக்கெட்டுகள் வழங்கப்படும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் அலுவலகப் பிரிவு, மக்கள் ஜனநாயகப் பேரவை (திரு.இராமேஸ்வரனின் கட்சி) ஆகியவையே இந்த ஏழும்.

இவற்றில் பல தமது டிக்கெட் கோட்டாவை பேரம் பேசி பணம் பண்ணுவதாகத் தெரிகின்றது.

"ஆற்றிலே போகின்றது; அண்ணன், தம்பி அள்ளிக் கொள்!" என்ற மாதிரி அள்ளிக் கொள்ள வாய்ப்புக் கிடைத்ததில் - கோட்டா கிடைத்ததில் - பல கட்சிகளுக்கும் உள்ளூரச் சந்தோஷம்.

பயண அவசர நெருக்கடி காரணமாக மக்கள், ஜனநாயக(?) வழிக்குத் திரும்பிய கட்சிகளிடம் பல்லாயிரக்கணக்கான ரூபாக்களை அழுது டிக்கெட் பெறுவது பலரையும் விசனத்தில் ஆழ்த்தியுள்ளது.

* * *

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் சிற்றூழியர்கள் உட்பட கல்விசாரா ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு புதியவர்களை நியமிப்பதை மாகாணக் கல்வி அமைச்சு நிறுத்திவிட்டதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வட க் கல்விப் பணிமனைகளுக்கு அறிவித்திருக்கின்றார்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான சகல நியமனங்களும் ஜனாதிபதி செயலகத்தினாலேயே வழங்கப்படவுள்ளதாக மாகாண ஆளுநர் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதாவது -

பிரபல பாடசாலை ஒன்றில் மலசலகூடத் தொழிலாளி ஒருவர் ஓய்வுபெற்றுச் சென்றால் ஜனாதிபதி செயலகத்துக்கு விண்ணப்பித்து அங்கிருந்து ஒருவரை நியமிப்பதற்கான அறிவுறுத்தலைப் பெறும்வரை பாடசாலைக்குச் செல்வோர் மூக்கைப் பொத்திக் கொண்டுதான் இருக்க வேண்டும்!

சரி. ஏன் இந்த நியமனம் வழங்கும் விடயம் ஜனாதிபதி செயலகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது?

ஜனாதிபதி செயலகத்தின் பேரில் இந்த நியமனங்களைச் செய்வது - செய்யப்போவது - எல்லாமே தமிழ்க் கட்சி ஒன்றுதான்! எதிர்வரும் பொதுத் தேர்தலை இலக்கு வைத்து வகுக்கப்பட்டுள்ள வியூகம் இது.

உதாரணத்துக்கு ஒன்று:-

அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட - கல்வி தொடர்பான - ஒரு நிறுவனத்துக்கு சுமார் ஒன்றரை டசின் ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் - எந்தவித நேர்முகப் பரீட்சை கூட நடத்தப்படாமல்.

தமிழ் அரசியல் கட்சி ஒன்று கொடுத்த பட்டியலின்படி நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இது எந்த ஜனநாயகமோ தெரியவில்லை!

கடந்த ஒன்றரை, இரண்டு மாதங்களாக இத்தகைய போக்குகள் அதிகரித்து வருகின்றன. ஆனால் அவை எவையும் வெளியே வருவதில்லை. ஆயுத பலமற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியும், ரெலிக்கொம்மும்தான் சிலருக்கு வெறும் வாய்க்கு அவல் போலக் கிடைத்துள்ளன.

சங்கின் பெயரில் ஊதப்படுவது ஊதுகுழல் என்பதால் இத்தகைய அரசியல் கட்சி குளறுபடிகள் மறைக்கப்பட்டு வருகின்றன!

* * *

உரியகட்டுப்பாடு, வழிகாட்டல்கள் இல்லாவிட்டால் பாடசாலை மாணவர்கள் 'தாதாக்களாகி' விடுவர் என்று இந்தப் பத்தியில் சில மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்டது தற்போது நிதர்சனமாகி வருகின்றது.

பாடசாலை மட்டத்தில் ராகிங், அடிதடி - சண்டை, மண்டை உடைத்தல், ரியூஷன் நிலையத்துக்குள் புகுந்து சண்டித்தனம் - கலாட்டா, ஆள் கடத்தல் என்று வம்புத்தனம் விரிவடைகிறது.

தற்போதைய நிலையில் அவற்றை விரிவாக இங்கு புட்டு வைப்பது, சூடு அடங்கிப் போகும் விவகாரத்தை மீண்டும் ஊதிக் கிளறுவதாகிவிடும்; எனவே தவிர்த்துக் கொள்வோம். ஆனால் நிலைமை மோசமடைந்தால் உண்மைகள் இங்கே அம்பலப்படுத்தப்படும் - பெயர் விவரங்களுடன்!

– மின்னல்.

## புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்


நேற்று உதயன் பத்திரிகையில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாளின் விடைகள் வருமாறு:-

### பகுதி I

(1) அன்பு (2) பறவையின்
(3) மனம் (4) முதுகை
(5) பிழையானது (6) கூறமுடியாது
(7) கூறமுடியாது (8) சரியானது
(9) சரியானது (10) 2,4
(11) 1,4 (12) 2,5
(13) அப்பா (14) பிள்ளைகள்
(15) நான் (16) அக்கா
(17) COLOMBO (18) MATARA
(19) 76539 (20) புத்தகம்
(21) 3 (22) 3
(23) ✓ (24) ×
(25) ✓ (26) ✓
(27) ✓ (28) O
(29) E (30) O
(31) B (32) D
(33) B (34) B,A,C,D
(35) 6சதுர செ.மீ (36) எரியும்-கூட
(37) எரியும்-குறைவு
(38) எரியாது - இல்லை
(39) எரியும் - குறைவு
(40) வைத்தியசாலை
(41) பாடசாலை (42) சமையறை
(43) மணிக்கூடு. கடிகாரம்
(44) ஆகாயவிமானம்
(45) மின்சூள்(டோர்ச்) (46) 8
(47) 24 (48) 100
(49) 4 (50) 1

### பகுதி II

(1) வீட்டு ஈ, இலையான்
(2) நோய்க்காவி
(3) வாந்திபேதி, வயிற்றோட்டம்
(4) பூச்சியினம்
(5) அழுக்கான இடங்களில்
(6) அழுகிய, உட்கார்ந்து
(7) ஒலி, அசுத்தமான, வருத்தம்
(8) 3 Kg 750g (9) 3Kg 250g
(10) 4 Kg 250g (11) 72/-
(12) 2 Kg 450g
(13) 31.50 சதம் (14) 1ரூ.50சதம்
(15)




(16) கொலாஜ் (17) மைதான
(18) ரேகை (19) ஏழுசுரங்கள்
(20) நாட்டார் (21) Hair
(22) Ear (23) Eye
(24) Nose (25) Mouth
(26) Neck (27) Shoulder
(28) அதிபர். புனிதமரியாள் வித்தியாலயம்
(29) விளையாட்டுப் பொறுப்பதிகாரியால்.
(30) விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதற்காக
(31) 56, நாவலர்வீதி, மாமடு
(32) விளையாட்டுப் பொறுப்பதிகாரி
(33) உமா
(34) மழையை அல்லது மழை நீரை அளப்பதற்கு
(35) போத்தல், புனல், அளவிடை
(36) மைதானமொன்றின் மத்தியில்
(37) 4 (38) 7
(39) 1 (40) 6
(41) 8 (42) 5
(43) 3 (44) 2
(45) 2,3
(46) துடுப்பும், பந்தும் - விளையாட்டு
(47) வயலின் - சங்கீதம்
(48) வண்ணக்கோல் - நடனம்
(49) ரீசுப் பேப்பர் - ஆக்கம்
(50) சுருதிப்பெட்டி - சங்கீதம்
(51) இழையோடல் - கைதயல்
(52) ஈரிழை - சித்திரம்
(53) விக்கட் - விளையாட்டு

# தேர்தல் முன்னேற்பாடுகள் குடாநாட்டிலும் ஆரம்பம்

யாழ். மாவட்ட செயலகத் தேர்தல் அலுவலகத்தினால் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி உட்பட குடாநாட்டின் பிரதேச செயலகங்கள் அனைத்துக்கும் தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் சம்பந்தமான விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் மாற்றங்கள் காணப்படுமாயின் அது பற்றிய விவரங்களையும் மற்றும் மாற்று வாக்களிப்பு நிலையங்கள் பற்றிய விவரங்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் முழுமையாகவும், வடமராட்சி, மருதங்கேணி, நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலகங்களில் ஒரு பகுதி மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-86)

# ஓய்வூதியர்களின் நலன் கருதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

ஓய்வூதியம் பெறுபவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கமாக ஓய்வூதியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பிரதேச, மாவட்ட தேசிய மட்டத்தில் இந்த நிதியத்துக்கான அமைப்புக்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

அரசின் பணிப்புரைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படவுள்ள இந்நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைவர்களாக பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பிரதேச செயலாளரும், மாவட்ட மட்டத்தில் அரச அதிபரும் கடமையாற்றவுள்ளனர்.

இக்குழு ஓய்வூதியர்களின் நலனைப் பாதுகாப்பதுடன் ஓய்வூதியர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கும்செயற்படவுள்ளது. (ஜ-86)

## இடம்பெயர்ந்தோருக்காக

# ஆயிரத்து 200 குடிசைகள் ஐ.நா. தூதரகம் அமைக்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை7

இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்துவதற்கென அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினால் ஆயிரத்து 200 குடிசைகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத்திட்டத்தின்கீழ் பருத்தித்துறையில்130, சங்கானையில்570, கரவெட்டியில்175, உடுவிலில்103, சண்டிலிப்பாயில்200 என்ற அடிப்படையில் குடிசைகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் குடிசைகள் அமைக்கப்படும் இடங்களில் மலசலகூடங்களும் நிறுவப்படும். கிணறுகள் திருத்தம் செய்யப்படும், புதிய கிணறுகள் தோண்டப்படவுள்ளதாகவும் ஐ.நா. நிறுவனத்தின் நுண்கருத்திட்டப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஜ-5)

## நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் 25பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஜ-5)

## தொண்டர் ஆசிரியர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி நியமனம் கிடைக்கப்பெறாதவர்கள் தமது பதிவுச்சான்றிதழ் மற்றும் நேர்முகப்பரீட்சைக் கடிதம் என்பவற்றுடன் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு டி.எம்.ஐ. கல்வி நிலையத்துக்குச் சமுகம்தருமாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (க)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட இறுதிவருட 'பி' பிரிவு மாணவர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரதான மண்டபத்தில் நடைபெறும். இங்கு பரீட்சை தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)

# இடம்பெயர்ந்தோர் நலனை கவனிக்க சமுர்த்தி ஊழியர்கள்

## நல்லூர் பிரதேச செயலர் ஏற்பாடு

வலி.வடக்கு,ஜூலை7

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளவர்களின் நலன்களை முகாம்கள் மட்டத்தில் கவனிப்பதற்கு பதினேழு சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் பிரதேச செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்..

இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள முகாம்களில் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைப் போக்குவதற்கு வசதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் 17 இடம்பெயர்ந்தோர் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணத்தைச் சீர்செய்தல், அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் பொருள்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காகவும் சுகாதார நடவடிக்கைகளைப் பேணுவதற்காகவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.(ஜ-86)

## மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை7

பாஷையூர் சென். அன்ரனீஸ் வித்தியாலயத்தில் கல்வி பயின்று இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சைக்கு இரண்டாவது தடவை தோற்றும் மாணவிகள் அனைவரையும் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றில் சமூகமளித்து தம்மைச் சந்திக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (க)

# இப்போதைய போர்க்கள முடிவுகளே இந்த அரசின் விதியைத் தீர்மானிக்கும்

**போர்க்களத்தில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகளைப் பெற்று அதன் மூலம் சிங்கள மக்களின் வாக்குகள் மூலம் மீண்டும் ஆட்சிக்கு வருவதே அரசின் ஒரே ஒரு எதிர்பார்ப்பாகும். இதைவிட ஏனைய அனைத்து வழிகளும் அரசுக்கு பாதகமாகவே அமைந்துள்ளன. இது தொடர்பாக "யுக்திய" சிங்கள வார இதழில் 18.06.2000 அன்று வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

பொதுத் தேர்தல் நடைபெற இன்னும் சுமார் இரண்டு மாதங்களே உள்ளன. தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் ஒகஸ்ட் 16 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதற்கிடையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி தீர்மானிக்கப்படும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட திகதியில் இருந்து 6 வாரங்களுக்குள் பொதுத்தேர்தல் நடைபெற்று புதிய நாடாளுமன்றம் உருவாக்கப்பட வேண்டும். இவற்றின்படி எவ்வாறாயினும் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் பொதுத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும்.

இதற்கிடையில் பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்ற செய்திகளும் அடிபடுகின்றன. அவ்வாறு செய்வதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். இதுவே பிரச்சினையான விடயம் ஆகும். இந்நோக்கிலேயே எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளும் கட்சியில் சேர்க்கும் முயற்சிகள் நடைபெற்றன என ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்கள் கருதுகிறார்கள். இருப்பினும் குறிப்பிடத்தக்களவு ஐ.தே. கட்சி உறுப்பினர்கள் கட்சி மாறாது இருப்பதும் அமைச்சரவையை சேர்ந்த பெரும்பாலோர் இந்த முயற்சிகளை விரும்பாது இருப்பதும் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணத்திற்கு இடைஞ்சலாய் உள்ளன. குறிப்பாக அமைச்சர் மங்கள சமரவீர இந்த முயற்சியை ஆதரிக்கவில்லை என்பது வெளிப்படை. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், இதற்கு முன்னர் ஐ.தே.கட்சியை உடைத்து, அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசு பக்கம் இழுக்க முன்னின்று உழைத்தவர் அமைச்சர் மங்கள சமரவீர என்பதுதான்.

எவ்வாறாயினும் கடந்தமாதம் 13 ஆம் திகதி கூடிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழு தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதில்லை எனவும் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவது எனவும் தீர்மானித்துள்ளது.

இதற்கிடையில் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு முன்னர் தீர்வுப்பொதியை தயாரித்து புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். கடந்த மார்ச் மாதத்திற்குள் அரசமைப்பு தொடர்பான பணிகளைச் செய்து முடிக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் குறிக்கோளாக இருந்தது. பின்னர் இதனை மே 31 ஆம் திகதிக்குள் செய்து முடிப்பது என தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் இந்தக் காலக்கெடுக்களுக்குள் நினைத்தவாறு செய்து முடிக்க முடியவில்லை. இந்த மாதம் (ஜூலை) முடிவதற்குள் அரசமைப்பு திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் பிரதியை விடுதலைப் புலிகளுக்கும் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மாத முடிவுக்குள் அரசமைப்பு திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் நோக்கிலேயே அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் பேச்சுவார்த்தைகள் அடிக்கடி இடம்பெற்றன.

### இந்திய அரசின் தலையீடு

இதற்கிடையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கின் சிறிலங்காவிற்கான விஜயமானது ஒரு புதிய அரசியல் திருப்பமாக அமைந்தது. இந்திய அமைச்சரின் விஜயத்திற்கு முன்னரே இந்தியாவில் இலங்கை விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது. தமிழக முதலமைச்சர் கருணாநிதி வெளியிட்ட கருத்து இந்திய அரசியல்வாதிகளிடையே புதிய சர்ச்சை ஒன்றைக் கிளப்பியது. சிறிலங்காவில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தொடர்ந்து பிரச்சினையின்றி வாழ முடியாதுள்ளதால் செக்கோஸ்லாவாக்கியாவில் நிகழ்ந்தது போன்று நாடு பிரிக்கப்படுவது அவசியம் எனக் கருணாநிதி தெரிவித்திருந்தார். கருணாநிதியின் இந்தக் கருத்தானது சிறிலங்கா அரசியல்வாதிகளை மாத்திரமின்றி இந்திய அரசியல்வாதிகளையும் குழப்பத்தில் ஆழ்த்தியது. ஆனால் ஒன்றுபட்ட சிறிலங்காவுக்குள் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே இந்திய மத்திய அரசின் நிலைப்பாடாகும். இந்திய மத்திய அரசில் பங்கு கொண்டுள்ள கட்சியான தி.மு.கழகத்தின் தலைவர் கருணாநிதி வெளியிட்ட இந்தக் கருத்தானது அவசரமாக அமைச்சரவையைக் கூட்டும் நிலையை வாஜ்பாய்க்கு ஏற்படுத்தியது. அந்த அவசர அமைச்சரவைக் கூட்டத்தில் ஒன்றுபட்ட சிறிலங்காவுக்குள் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது என்ற மத்திய அரசின் நிலை மீண்டும் உறுதி செய்யப்பட்டது.

### தி.மு.க.சார்பில் முரசொலிமாறன்

அவசர அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் மத்திய அமைச்சரும் தி.மு.க பிரதிநிதியுமான முரசொலி மாறன் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை உறுதி செய்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் சிறிலங்காவுக்கான விஜயமானது, இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை மீண்டும் உறுதி செய்தது.

சிறிலங்கா ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ் கட்சிகளைச் சந்தித்த இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்தப் பிரச்சினையுடன் தொடர்புடைய சகல தரப்பினரும் அழைப்பு விடுத்தால் மட்டுமே இந்தப் பிரச்சினையில் இந்திய அரசு மத்தியஸ்தம் வகிக்கும் முயற்சியில் ஈடுபடும் எனத் தெரிவித்தார். அதேநேரம் இந்திய அமைச்சர் யுத்த ரீதியான தீர்வை நிராகரித்தார். நானூறு கோடி ரூபா மதிப்புள்ள நிதி உதவி அளிப்பது எனவும் இந்திய அமைச்சர் தெரிவித்தார்.

தேர்தல் நெருங்கும் வேளையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளின் ஏற்றத்தை எந்தவொரு அரசும் விருப்பத்துடன் மேற்கொள்ளாது. ஆனால் மண்எண்ணெய், டீசல், சமையல் காஸ், மின்சாரக்கட்டணம் ஆகியன கூடியுள்ளன. பஸ்கட்டணம் மற்றும் ஏனைய போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரித்துள்ளதால் ஏனைய அனைத்து பொருள்களினதும் விலைகள் அதிகரிப்பதை தவிர்க்க முடியாது. இன்னும் இரண்டு மாதங்களில் பொதுத் தேர்தலை எதிர்நோக்கவுள்ள ஓர் அரசுக்கு இவையெல்லாம் ஒருபோதும் சாதகமானவையாக அமையமாட்டா.

### அரசு யுத்தத்தில் சிக்கியுள்ளது

உண்மையில் நிகழ்ந்துள்ளது என்னவென்றால் அரசாங்கம் யுத்தத்தில் ஏறுமாறாகச் சிக்கியுள்ளதால் அதற்கான செலவினங்களை மேற்கொள்வது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்பதே. ஒரு புறத்தில் மக்களின் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்த வண்ணமுள்ளன. மறுபுறத்தில் அரசு யுத்தத்தை மேற்கொள்ள நவீன ஆயுதங்களைப் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. மிகவும் விலையுயர்ந்த விமானங்கள், தாக்குதல் படகுகள் மற்றும் யுத்த உபகரணங்களை மிக விரைவில் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றில் சில வந்தடைந்த வண்ணமுமுள்ளன. இந்தப் புதிய ஆயுதங்களின் வருகையை அடுத்து போர்க்களத்தில் அரசபடைகளுக்குச் சாதகமான நிலை உருவாகி வருவதாக அரசின் போர்க்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர்க்கள நிலைவரத்தில் உருவாகி வருவதாகக் கூறப்படும் அரசுக்குச் சாதகமான நிலையே தவிர்ந்த ஏனைய அனைத்தும் அரசுக்கு சாதகமற்ற நிலையே உருவாகியுள்ளன. பொருள்களின் விலையேற்றம் மக்களைக் குழப்பமடையச் செய்துள்ளது; நாணய மதிப்பிறக்கம் காரணமாகப் பொருளாதாரத் துறையில் பாதிப்பேற்பட்டுள்ளது; உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளதால் வெளிநாட்டு வர்த்தகம் பாதிப்படைந்துள்ளது. சில உற்பத்தி நிறுவனங்கள் மூடப்படும் நிலையை அடைந்துள்ளன.

இதற்கிடையில் நாட்டில் இடம்பெற்றுவரும் போர்ச்சூழ்நிலைமை காரணமாக உல்லாசப் பயணத்துறை பாதிக்கப்பட்டுள்ளது.

'யுத்தத்திற்கு பெருமளவு நிதி செலவிடவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ள இந்த வேளையிலேயே மேற்குறிப்பிட்ட அனைத்து நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

### யுத்தமே ஒரேயொரு எதிர்பார்ப்பு

பொதுத் தேர்தலுக்கு முன்னர் போர்க்களத்தில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகளைப் பெறுவது மட்டுமே அரசாங்கத்தின் ஒரேயொரு எதிர்பார்ப்பாகும். போர்க்களத்தில் பெறும் வெற்றிகள் மூலம் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று மீண்டும் மக்களின் வாக்குகளைப் பெற்று மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதைத் தவிர, இந்தச் சூழ்நிலையில் அரசுக்கு வேறு எந்த எதிர்பார்ப்புகளும் இருக்கும் எனக் கூறமுடியாது. ஜனாதிபதி பதவி தம்வசம் இருப்பதாலும் ஐ.தே.கட்சி பலவீனமடைந்துள்ளதாலும் வெற்றி தமக்கே என்ற எண்ணம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமைக்கு இருக்கக்கூடும். இருப்பினும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசர கால நிலை மற்றும் பத்திரிகைகள் மீதான செய்தித் தணிக்கை ஆகியனவற்றால் அரசின் எதிர்பார்ப்புக்கள் சாத்தியமாகா.

**தமிழில்:- கஜனி**

அரசாங்கம் போர்க்கள வெற்றிகளை எதிர்பார்த்துச் செயற்படுவதாயின் அது எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது என்பதே பிரச்சனைக்குரியதாகும். தற்போது வரை பாரிய பின்னடைவுகளைச் சந்தித்துள்ள போர்க்கள நிலைமையில் இந்தக் குறுகிய கால எல்லைக்குள் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்ப்பது கடினம். அரசாங்கம் விரைவாகப் பெற முயற்சிக்கும் புதிய ஆயுதங்கள் அனைத்தும் இதுவரை வந்து சேரவில்லை. மறுபுறத்தில் திட்டமிட்ட அடிப்படையில் யுத்தத்தின் மூலம் வெற்றிகளைப் பெறுவது காலமெடுக்கும் விடயமாகும். இவை யாவற்றையும் நோக்கும்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு நிச்சயமற்ற ஓர் எதிர்காலத்தை நோக்கியே செயற்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது எனக் கூறலாம்.

*

---

## வெளியிடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 6ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(129326ஏ),(129326பி), (139643ஏ), (139643பி), (142041ஏ), (142041பி), (143801ஏ), (143801பி), (143801சி), (143839ஏ), (143840ஏ), (143840பி), (143983ஏ), (144019ஏ), (144021ஏ), (144021பி), (144022ஏ), (144023ஏ), (144024ஏ), (144024பி), (144024சி), (144024டி), (144028ஏ), (144028பி), (144028சி), (144233ஏ), (146955ஏ), (146955பி), (146955சி), (147229ஏ), (147229பி), (147236ஏ), (147401ஏ), (147401பி).

**நல்லூர்**

(145122ஏ),(145122பி), (145122சி), (145122டி), (145122ஈ), (143753ஏ), (143753பி), (143753சி), (143753டி), (143753ஈ), (143753எவ்), (143755ஏ), (143755பி), (143755சி), (143857ஏ), (144013ஏ), (144013பி), (144056ஏ), (144058ஏ), (144058பி), (144162ஏ), (144162பி), (144163ஏ), (144163பி), (144196ஏ), (144208ஏ), (144208பி), (146995ஏ).

**சண்டிலிப்பாய்**

(141825ஏ), (141902ஏ), (142033ஏ), (142033பி), (143811ஏ), (143811பி), (143900ஏ), (143900பி), (143955ஏ), (143955பி), (143955சி), (143979ஏ), (143979பி), (144055ஏ), (144061ஏ), (144061பி), (144107ஏ), (147086ஏ), (147222ஏ), (147222பி), (148259ஏ), (148259பி), (148259சி).

**தெல்லிப்பழை**

(143763ஏ), (144042ஏ), (144042பி), (144195ஏ), (146410ஏ), (147177ஏ), (147177பி).

**உடுவில்**

(143187ஏ), (143187பி), (143188ஏ), (145157ஏ), (145159ஏ), (147633ஏ), (134820ஏ), (142059ஏ), (143742ஏ), (143742பி), (143742சி), (143743ஏ), (143743பி), (143905ஏ), (143906ஏ), (143999ஏ), (143999பி), (143999சி), (143999டி), (144054ஏ), (144054பி), (144054சி), (146277ஏ), (146277பி), (146284ஏ), (146284பி), (147173ஏ), (147173ஏ), (147173சி), (147173டி), (147178ஏ), (147178பி), (147178சி), (147234ஏ), (147234பி), (147384ஏ), (152513ஏ), (152513பி), (152526ஏ).

(க)

## நல்லூர் ஆலய வீதி வேலைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை7

நல்லூர் ஆலயத்தின் உட்பிரகார வீதியின் வேலைகள் இன்று, செவ்வாய்க்கிழமை காலை 7மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.

சிரமதான அடிப்படையில் நடைபெறவுள்ள இந்த வேலைத் திட்டத்தில் உள்ளூர் தொண்டர் ஸ்தாபனங்கள், யாழ். மாநகர சபையின் சமய விவகாரக்குழு, நலன்புரிக் கழகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 100பேர் வரையில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(இ-10)

## இடம்பெயர்ந்த மக்களின் சுகாதார நிலை பாதிப்பு

### சுகாதார அதிகாரி கவலை

யாழ்ப்பாணம், ஜூலை7

இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசிக்கும் மக்களின் சுகாதார நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உ. சிவபாதசுந்தரம் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில் தெரிவித்துள்ளதாவது:-

மீளக் குடியமர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொண்டிருக்கிற நேரத்தில் இடம்பெயர்ந்த மக்களின் சுகாதாரப் பிரச்சினைகளையும் மேலதிகமாகக் கவனிக்க வேண்டிய நிலைக்கு சுகாதார ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் இடங்களில் அடிப்படை வசதிகள் குறைவாகவே உள்ளன. இதனால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் மலசல கூட வசதிகள் இல்லை. பலர் ஒன்றாக சேர்ந்திருக் கையில் நோய்கள் பரவுவதனையும் தடுக்க முடியாது.

இடம்பெயர்ந்த மக்களின் சுகாதார பிரச்சினைகளைக் கவனிப்பதற்கு எம்மிடம் தேவையான சுகாதார வைத்தியஅதிகாரிகள் இல்லை.

12 சுகாதார வைத்திய அதிகாரிகள் கடமையாற்ற வேண்டிய பிரதேசத்தில் மீள் நியமனம் செய்யப்பட்ட இரு வைத்திய அதிகாரிகள் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் சுகாதாரப் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கு எமது திணைக்கள ஊழியர்கள் தினசரி ஒவ்வொரு நிலையங்களுக்கும் விஜயம் செய்கின்றனர்.

அங்குள்ள மக்களின் சுகாதாரக் குறைபாடுகளை அறிந்து உடனுக்குடன் எனக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மின்சார வசதிபோதாமலுள்ளதால் குளிரூட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட வேண்டிய அத்தியாவசிய மருந்துகளைப் பாதுகாக்க முடியாமலுள்ளது.

மின் பிறப்பாக்கிகள் மூலம் மின்சார வசதிகளை ஏற்படுத்தி வருகிறோம். இதற்குத் தேவையான எரிபொருள் பெற முடியாத காரணத்தினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளோம்.

எம்மிடமுள்ள அத்தியாவசிய மருந்துகளைப் பாதுகாக்க வேண்டுமானால் இதற்கு 24 மணி நேரமும் மின்சாரம் தேவை. இதற்கான எரிபொருள் பெறுவதற்கு அரசாங்க அதிபரின் அனுமதி கிடைத்தும் இதனைச் சீராகப் பெறமுடியவில்லை. இதனால் மேலதிக மருந்துகளைச் சேமிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

(ஐ-5)

## பொதுத்தேர்தலை ஒட்டி கிராம அலுவலர்களின் கடமை நாள் மாற்றம்

வலி.வடக்கு, ஜூலை7

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை ஒட்டி கிராம அலுவலர்களின் கடமை நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது பற்றிய சுற்றறிக்கை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை நாளும் இருந்த சனிக்கிழமை முழுநேர கள வேலை நாளாக மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் வியாழக்கிழமை முழுநாளும் அலுவலக நாளாக மாற்றப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்களின் அலுவலக நாள்களாக தேர்தல் முடிவடையும்வரை திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்கள் மட்டுமே இருக்கும்.

(ஐ-86)

# புதனன்று எம்.பிக்கள் பலர் நாடாளுமன்றுக்கு வரவில்லை

நாடாளுமன்றக் கூட்டம் புதன் கிழமை நடைபெற்றபோது முக்கிய அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் பலரும் அங்கு சமுகமளித்திருக்க வில்லை எனக் கொழும்புத் தவக வல்கள் தெரிவித்தன.

தமிழ்க் கட்சிகள் சிலவற் றின் எம்.பிக்களே அங்கு சமுகமளித் திருந்தனர் எனவும்-

பாதுகாப்புக் காரணங்களா லேயே ஏனையோர் அன்றைய நாடாளுமன்ற அமர்வுக்குச் சமுக மளிக்கவில்லை என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ-7)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வி சசிகலா சுப்பிரமணியம்

கிழுவானை ஒழுங்கை, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும். தென்மராட்சிப் பிரதேச செயலக சிறாப்பராகக் கடமை புரிந்தவருமான செல்வி சசிகலா சுப்பிரமணியம அவர் கள் சாவகச்சேரியில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக 24-05-2000 அன்று அகாலமரணமடைந்தமையையிட்டு, அன் னாருக்கு எங்கள் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை நாம் பிரார்த் திப்பதுடன், துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேசசெயலகஊழியர் நலன்புரிச்சங்கம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

தென்மராட்சி பிரதேச செயலக,
உப-அலுவலகம்,
நெல்லியடி.
(76237)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

கலைமாணி,நுண்கலைமாணி.
(இசை/நடனம்)
வணிகமாணி,
தொழில் நிர்வாகமாணி
முதலாம், இரண்டாம்,
மூன்றாம் வருட கற்கை
நெறிகளுக்கான ஆங்கிலம்
(இரண்டாம் மொழி)

*மீள்பரீட்சை.*

மேற்படி மீள் பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக இராம நாதன் மண்டபத்தில் நடை பெறவுள்ளன. ஆங்கில பாட மீள்பரீட்சார்த்திகள் இவ்வறிவித் தலைக் கவனத்திற்கொண்டு பரீட்சைக்குத் தோற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுகின் றனர்.

முதலாம் ஆண்டு மீள்பரீட்சை
ஆங்கிலம் (இரண்டாம்மொழி)
17-07-2000

இரண்டாம் ஆண்டு
மீள்பரீட்சை ஆங்கிலம்
(இரண்டாம் மொழி)
18-07-2000

மூன்றாம் ஆண்டு மீள்பரீட்சை
ஆங்கிலம் (இரண்டாம்மொழி)
19-07-2000

நேரம் 9.30 - 12.30

பதிவாளர்

05-07-2000 (C/12159)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

பளை மத்தியகல்லூரி ஆசிரியரும்
பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினருமாகிய

**க. சிவபாலன்** (B.Com) அவர்கள்

24-05-2000 அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தின ருக்கும், தாயாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப் பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பழைய மாணவர் சங்கம்
பளை மத்திய கல்லூரி

பளை (76184)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக மாணவன்
**குகதாஸ்** அவர்களின்
அன்புச் சகோதரி
**செல்வி சசிகலா சுப்பிரமணியம்**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

4 ஆம் வருட மாணவர்கள்,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(76232)

---

## யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

### பொதுக்கூட்ட அறிவித்தல்

இடம்:- கல்லூரி பிரதான மண்டபம்
காலம்:- 23-07-2000 ஞாயிறு முற்பகல் 10 மணி (புதியநேரம்)
தலைவர்:- திரு.வே.நாகராசா B.Sc.

மேற்குறித்த தினத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திலும் புதிய நிர்வாகத்தேர்விலும் கலந்து கொள்ளுமாறும், அன்றைய தினம் நடை பெறவுள்ள மதிய போசனத்தில் கலந்து கொள்ள விரும்பும் அங்கத்த வர்கள் தயவுசெய்து நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு பெயர்களை முற்கூட்டியே பதிவு செய்து ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

வே. நாகராசா
தலைவர்

தி. உதயசூரியன், ஜே. பி.
கௌரவ செயலாளர்

திருமதி அ. வேலுப்பிள்ளை BSc., Dip.in.Bd.
அதிபர்

(76220)

---

## B.A. (பேராதனை)

விரிவுரைகள் ஆரம்பம் *08-07-2000 (9மணி)*

*G.A.Q பரீட்சை முடிவுகள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.*

S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

*ஆரியகுளம்சந்தி - யாழ்.*

(76234)

---

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைத் தலைவரினால் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் வீதி வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 12-07-2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை இவ்வலுவலகத்திற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்திக் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச்சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியி லிட்டு இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு 17.07.2000 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய தாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
04. கேள்விகள் 17-07-2000 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
06. மீளளிக்கப்படக்கூடிய ஒப்பந்த வைப்புப் பணமாக ஒப்பந்தத் தொகையில் 5% வைப்பிலிடல் வேண்டும்.
07. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|
| 1. பட்டின சபை ஒழுங்கை தார் வீதி திருத்தம் | 750/- | 200/- |
| 2. சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கத் தார் வீதி திருத்தம் | 750/- | 200/- |
| 3. விளாத்தியடி தார் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 4. வடலித்தோட்டம் தார் வீதி திருத்தம் | 500/- | 200/- |
| 5. பாத்திமா தார் வீதி திருத்தம் | 1000/- | 200/- |
| 6. மாசியப்பிட்டி மேற்கு தார் வீதி திருத்தம் | 750/- | 200/- |
| 7. பழம் வீதி, கரைப்பிரான் பற்று ,கோவில் தார் வீதி திருத்தம் | 500/- | 200/- |
| 8. சண்டிலிப்பாய் முருகமூர்த்தி, தார் வீதி திருத்தம் | 300/- | 200/- |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்
ஜே.பீ.யூ.எம்
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய். (12154)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
நகரமண்டபம், மானிப்பாய்.

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
06
-
11
-
1957



மறைவு
24
-
05
-
2000

செல்வி
### சசிகலா சுப்பிரமணியம்
(சிறாப்பர், பிரதேச செயலகம், சாவகச்சேரி)

அமரத்துவ திதி: **விக்கிரம வைகாசி அபரபக்க ஷஷ்டி**

கடமை காரணமாகத் தங்கியவிடத்துக் காலனின் கணை பட்டு எமது கண்ணில் படாமலே மறைந்துவிட்ட எமது குலமகளின் பிரிவுத்துயரில் பங்கு கொண்டு, பல்வேறு வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் நேரில் வந்தும் கடிதம் மற்றும் பத்திரிகை மூலம் அனுதாபம் தெரிவித்து எமக்கு ஆறுதலளித்த அனை வருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (07-07-2000) வெள்ளிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய, ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள் ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பெற்றோர்,
சகோதரர்கள், சகோதரிகள்.

கிழுவானை ஒழுங்கை,
கோப்பாய்.
(12157)

# இடம்பெயர்ந்தோரில் 5 ஆயிரம் பேர் வலிகாமம் தெற்கில் தங்கியுள்ளனர்

வலிகாமம் தெற்கு, ஜூலை 7

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் தங்கள் சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்த ஐயாயிரத்துக்கு கூடுதலான குடும்பங்கள் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளன.

பிரதேச செயலகத்தின் பதிவேடுகளின்படி 5 ஆயிரத்து67 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 982 பேர் இப்பகுதியில் இடம்பெயர்ந்து தங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவர்களில் மிக கூடுதலான குடும்பங்கள் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தவைகளாகும்.

தென்மராட்சியைச் சேர்ந்த 2 ஆயிரத்து143 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 558 பேர் இப்பகுதியில் குடியமர்ந்துள்ளனர்.

தென்மராட்சியைத் தவிர பளை, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் குடியிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 788 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து133 பேரும் —

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 751 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 664 பேரும் —

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 164 குடும்பங்களைச் சேர்ந்த 592 பேரும் —

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருந்து ஆயிரத்து 54 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 784 பேரும் —

பளைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 67 குடும்பங்களைச் சேர்ந்த 201 பேரும்—

வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் வந்து தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களை பிரதேச செயலகத்தினர் இப்பகுதியிலுள்ள 15 நலனோம்பு நிலையங்களில் தங்க வைத்துள்ளனர்.

நலனோம்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 509 குடும்பங்களைத் தவிர ஏனையோர் தமது உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

நலனோம்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள குடும்பங்களின் சுகாதார, குடிதண்ணீர், இருப்பிட, உணவு சம்பந்தமான விடயங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் பல கவனித்து வருகின்றன.

தற்காலிக கொட்டில்களை அமைத்துக்கொடுக்கும் பணியில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினரும் —

நீர், சுகாதாரம் சம்பந்தமான பணிகளில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் பட்டினிக்கெதிரான நிறுவனமும் —

உணவுப்பண்டங்கள் அல்லாத பொருள்களை வழங்குவதில் 'யூனிசெவ்', அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் என்பனவும் ஈடுபட்டு வருகின்றன.

நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு மட்டுமல்லாது வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கும் இவர்கள் உதவி வழங்கி வருகின்றனர்.

(ஐ-152)

## குடிதண்ணீர் வசதி இன்றி இடம்பெயர்ந்தோர் கஷ்டம்

நெல்லியடி, ஜூலை 7

சிங்கைநகர் பனம்பொருள் பல்தொழில் தொகுப்பு கட்டடத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் குடிதண்ணீர் இன்றி கஷ்டப்படுகின்றனர்.

இப்பகுதியில் அமைந்துள்ள பொதுக்கிணற்றை உடனடியாகப் புனரமைப்புச் செய்து தருமாறு சிங்கைநகர் உதயசூரியன் சனசமூக நிலையத் தலைவர் லயன் வி. ஜீ. தங்கவேல், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனிடம் கோரி உள்ளார்.

(இ109)

## ஆசிரியர் பதவி உயர்வு கோரும் விண்ணப்பங்கள் விநியோகம்

அச்சுவேலி, ஜூலை 7

இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு கோரும் விண்ணப்பம் யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றது.

இலங்கை ஆசிரியர் சேவையில் நிரந்தர நியமனம்பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் சேவைத் தரங்களில் பதவி உயர்த்தப்படுவதற்கு விவரங்களைக் கோரும் விண்ணப்பங்களே வலயக் கல்வித் திணைக்களங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கல்வி உயர்கல்வி அமைச்சுச் செயலாளரின் 2000 — 14 ஆம் இலக்க 2000—03—27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் மூலம் இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ளவர்களின் பதவி உயர்வுகள் சம்பந்தமாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க 3 ஆம் வகுப்பு 2 ஆம் தரம், 3 ஆம் வகுப்பு முதலாம் தரம், 2 ஆம் வகுப்பு 2 ஆம் தரம், 2 ஆம் வகுப்பு முதலாம் தரம், முதலாம் வகுப்பு ஆகிய ஐந்து தரங்களுக்கு பதவியுயர்த்தப்படவுள்ளனர்.

ஒவ்வொரு சேவைத் தரங்களிலுமுள்ளவர்களுக்கும் சேவைக்கேற்ப புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர் சேவையில் பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

பயிற்றப்படாத — பட்டதாரியாக்கப்படாத — முன் சேவைக் காலங்களுக்கு வருடத்திற்கு அரை புள்ளியும் பயிற்றப்பட்ட, பட்டதாரியாக்கப்பட்ட சேவைக் காலங்களுக்கு வருடத்துக்கு ஒரு புள்ளியும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவிற்கு மேலதிகமாக ஒரு புள்ளியும் வழங்கப்பட்டு சேவைத் தரங்கள் நிர்ணயிக்கப்படவுள்ளன.

மொத்தப்புள்ளி 20-க்கு மேல் பெறுபவர்களும் 2000—12—31 ஆம் திகதி 50 வயதைப் பூர்த்தி செய்பவர்களும் சேவை தரம் 1-க்கு செல்லுவதற்குத் தகுதி பெறவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ 11)

## கற்றல் செயற்பாடுகள் நிறைவு

கடந்த மே மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகி இயங்கி வரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி சேவை முன் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின்படி முதலாம் தவணைக்கான கற்றல் — கற்பித்தல் மற்றும் கள ஆய்வுச் செயற்பாடுகள் யாவும் நிறைவாகப் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது குறித்த தவணைக்கான கணிப்பீட்டுச் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன

தேசிய கல்வியியல் கல்லூரியில் பயிற்சி பெற்று வரும் ஆசிரிய மாணவர்கள் யாவரும் அடுத்த தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பமாகியதும் முதல் வாரத்தில் கற்பித்தல் பயிற்சி பெறுவதற்காகப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

(ஐ-152)

## அமைதி வேண்டிப் பிரார்த்தனை

நாட்டில் அமைதி வேண்டி வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலயத்தில் பிரார்த்தனை அண்மையில் நடைபெற்றது.

அடியார்கள் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பெருமளவு அடியார்கள் கலந்துகொண்டனர்

(இ-169)

# பரீட்சை நடைபெறாததால் பரீட்சார்த்திகள் ஏமாற்றம்

கொக்குவில், ஜூலை 7

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் இறுதிப் பரீட்சைகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவில்லை.

இதனால் மேற்படி பரீட்சைகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்த கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்துக்குச் சென்றிருந்த சுமார் 78 பரீட்சார்த்திகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்

இதேவேளை மேற்படி பரீட்சார்த்திகள் சிலருக்கான அனுமதிஅட்டைகள் பரீட்சை ஆரம்பமாகும் தினத்துக்கு முன்தினமே கிடைத்தன எனவும்—

பல பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை எனவும்— தெரிவிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டு முதல் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்டுவந்த இந்தப் பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறமாட்டாது என கடைசி நேரத்தில்— அனுமதி அட்டைகளில்— குறிப்பிடப்பட்டிருந்தமை பரீட்சார்த்திகள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி பரீட்சையில் சில பாடங்களுக்கான பரீட்சை நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுமென பரீட்சை நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-7-69)

## ஆங்கில தினப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு, ஜூலை 7

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் இன்றும் நாளையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளன. (ஐ-152)

★ ★ ★

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில மொழித் தினப் போட்டிகள் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் 13 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

(ஐ-152)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 7

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் விரைவில் வலய அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ளன.

ஆங்கில தினப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் பத்தாம் திகதி ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(இ-117)

## இடம் பெயர்ந்தவர்களுக்கான உதவிப்பணம் வடமராட்சியில்

தென்மராட்சி, ஜூலை 7

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் வடமராட்சிப் பிரதேசத்தில் கரவெட்டி, பருத்தித்துறை, உடுப்பிட்டி மற்றும் கொடிகாமம் ஆகிய தபால் நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

நெல்லியடியில் இயங்கும் தென்மராட்சிப் பிரதேச செயலக தற்காலிக பணிமனையில் பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாகவும் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-117)

## பாராட்டு விழா

சுழிபுரம், ஜூலை 7

தொல்புரம், மூளாய் ஐக்கிய பரஸ்பர சங்க உப தலைவர் தி. உதயசூரியன் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையொட்டி எதிர்வரும் ஞாயிறு காலை 9. 30 மணிக்குச் சங்க மண்டபத்தில் பாராட்டு விழா ஒன்று நடத்தப்பட உள்ளது.

சங்கத் தலைவர் பொ. சண்முகலிங்கம் தலைமையில் விழா நடைபெறும்.

(இ-28)

## விண்ணப்ப முடிவு திகதி ஜூலை 31

பருத்தித்துறை, ஜூலை 7

ஜி.சி.ஈ. சாதாரணதரப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இடம்பெயர்ந்த தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி முதலிய இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் தாம் முன்னர் கற்ற பாடசாலைகளுக்கூடாகவே விண்ணப்பிக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இம் மாணவர்கள் தமது அதிபர்களைச் சந்தித்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-118)

## மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு

# வன்னியில் வைத்தியசாலைகள் இயங்க முடியாத நிலையில்!

### செஞ்சிலுவை சர்வதேசக் குழு தெரிவிப்பு

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதைத் தொடர்ந்து அங்குள்ள வைத்தியசாலைகள் சில இயங்க முடியாத நிலையில் உள்ளன என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதிக்கு சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டு வரும் சுகாதார சேவை போதுமானதாக இல்லை எனவும் அங்கு அடிப்படை மருத்துவ சிகிச்சைக்கான பொருள்கள் இல்லாது இருப்பதாகவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதியில் விசேட சிகிச்சைகள் எதனையும் செய்ய முடியாமல் இருப்பதுடன் மருத்துவ அதிகாரிகளுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது எனவும்—

இதனால் அக்கராயன், மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆகிய வைத்தியசாலைகள் மட்டுமே சிறிய அளவில் இயங்கி வருவதாகவும்—

ஏனைய வைத்தியசாலைகள் இயங்க முடியாமல் இருப்பதாகவும்— அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-க)

## அனலைதீவு - எழுவைதீவு

# படகுப்பயணிகளின்இறங்குதுறை கரம்பன் பகுதிக்கு மாற்றம்

அனலைதீவு — எழுவைதீவு பயணிகளின் இறங்குதுறையாகத் தற்பொழுது ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகி அம்மன் பாலம் பயன்படுத்தப்படுகிறது.

ஊர்காவற்றுறைப் பாலம் பயணிகள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் மேற்படி தீவுகளுக்கான படகுச்சேவை கரம்பன் கண்ணகி அம்மன் பாலத்தினூடாக மாற்றப்பட்டுள்ளது. போதிய வசதிகளற்ற இப் பாலத்தின் ஊடாகப் போக்குவரத்துச் செய்வது சிரமமாக உள்ளதாகத் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலம் வரையான போக்குவரத்துக்கு ஊர்காவற்றுறையில் இருந்து ஈ.பி.டி.பி அமைப்பினரின் வாகனச் சேவை மட்டுமே உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-111)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவதற்கு மாநகரசபை எல்லைக்குள் வீடு அல்லது வீட்டின்பகுதி வாடகைக்குத் தேவை. விள. இல. 1057, மே. பா. உதயன். (76222)

### அபூர்வ ஜோதிடம்

கொடிய நோய்க்கு தெய்வீக மருத்துவம், மன நோயாளிகள் பூரண சுகம் பெறல், உங்கள் அதிர்ஷ்ட காலம் எப்போது? காலை 8.30 — 01.00 வரை. இல. 304, ஆலடிச்சந்தி, பலாலி வீதி, கந்தர்மடம். (76205)

# விவசாயிகளுக்கு தரமான விதை நெல் கிடைக்கும்

## திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

எதிர்வரும் பெரும் போகத்தில் (2000 — 2001) நெற்செய்கையில் ஈடுபடவிருக்கும் விவசாயிகளுக்கு தரமான விதை நெல்லை விநியோகம் செய்வதற்கு விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

கடந்த பெரும் போகத்தில் விவசாயத் திணைக்களத்தினாலும் கமநல சேவைகள் திணைக்களத்தினாலும் வழங்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட விதை நெல் மூலம் உற்பத்தியை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து தரமுள்ள விதை நெல் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு சேகரிக்கப்படும் விதை நெல் பெரும் போக நெற்செய்கைபாளர்களுக்கு விநியோகம் செய்யப்படும் என்று உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை தெரிவித்தார்.

கடந்த பெரும் போகத்தில் பதிவு செய்யப்பட்ட நெல்லைப்பெற்று உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் தம்மிடம் மேலதிகமாக இருக்கும் விதை நெல் பற்றிய விவரங்களை தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியரிடம் தெரிவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-5)

## பாடசாலை இடம் மாற்றம்

மக்கள் இடப் பெயர்வு மற்றும் பாதுகாப்புக் காரணங்களால் வயாவிளான் குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை தற்காலிகமாக இடம் மாற்றி இயங்கி வருகின்றது.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் மாலை நேர பாடசாலையாக மேற்படி பாடசாலை நடைபெற்றுவருகின்றது. (ஐ-152)

## அடிக்கல் நடும் விழா

சுழிபுரம் மேற்கு அரிகர புத்திர ஐயனார் ஆலயவசந்த மண்டப அடிக்கல் நடும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் வரும் சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

சுழிபுரம் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினர் இந்த மண்டபத்தைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளனர்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு. தம்பிஐயா தலைமையில் இந்த வைபவம் நடைபெறும். (க-8)

## இருபாலையில் 350 பேர் இடம் பெயர்வு

இருபாலை கிழக்கு, தெற்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளில் மட்டும் 150க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 350 பேர் இடம்பெயர்ந்து அயற் கிராமங்களில் வசித்து வருவதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களில் பெரும்பாலானோர் கூலித்தொழில் மற்றும் சீவல் தொழில் செய்பவர்களாவர். (ஐ-180-86)

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 1967 — 02 — 20

இறைவன் அடியில் 1999 — 06 — 19

### அமரர் சுப்பிரமணியம் சுகேந்திரன்

திதி: 07-07-2000

ஆண்டொன்று சென்றதையா உன் திருமுகத்தைக் காணத்துடிக்குதையா
கொண்டிருந்த பாசங்களைத் துண்டித்து ஏன்தான் தனிவழியே சென்றாயையா!
காலமெல்லாம் உமக்காக கண்களில் நீர் நிரம்பி வழியுதையா!
சாலமாய் இவ்வுலகை நீத்தாயையா ஏழுலகும் உம்மை மறவோமையா!

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

குடமியன், வரணி. (76181)

## இடர் களையும் திருப்பதிகம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

எமது மக்கள் தற்பொழுது எதிர்நோக்கும் அல்லல் தீர அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் ஆலயங்கள் தோறும் சென்று இடர் களையும் திருப்பதிகத்தை பாராயணம் செய்து வருகின்றனர்.

எனவே ஆலயங்களுக்குச் சென்று பாராயணம் செய்ய முடியாதவர்கள் தமது இல்லங்களில் இருந்தவாறே இப்பாராயணத்தை மேற்கொள்ளும் பொருட்டு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் இடர் களையும் திருப்பதிகநூல் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. (இ-10)

## விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஜூலை 7

உரும்பிராய் தெற்கு விவசாய சம்மேளனத்தினால் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்குக் கட்டுப்பாட்டு விலையில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை 4 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் இரண்டு தடவைகள் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டதாக சம்மேளனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

## தபாலகம் இயங்குகிறது

மக்கள் இடம் பெயர்வு காரணமாக இதுவரை கால மும் யாழ். பிரதம தபால் அலுவலகத்தில் இயங்கி வந்த கொழும்புத்துறை உபதபால் அலுவலகம் தற்போது இல. 169, கொழும்புத்துறை வீதியில் செயற்பட்டு வருகிறது. இங்கு தற்போது ஜூன் மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பணத்தைப் பெறுபவர்கள் அங்கு சென்று பெற்றுக் கொள்ளலாம் என உபதபால் அதிபர் திருமதி எஸ். செந்தில்குமரன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## காணாமற்போன ஊழியரின் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

1996 ஆம் ஆண்டு காணாமற்போன நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர் ஒருவரின் சம்பளம் திணைக்களப் பணிமனைக்கு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஊழியரின் சம்பளத்தினை அவரது மனைவியான திருமதி எஸ். ஜெயபாலசிங்கம் என்பவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று திணைக்கள அதிகாரி கைது செய்யப்பட்டோர், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்துக்குத் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 25 — 06 — 1932

உதிர்வு 07 — 06 — 2000

### அமரர் சின்னத்துரை கனகசபை

(ஓய்வுபெற்ற இறைவரி அதிகாரி)

நிலவு வெறும் நிழலாக
எம் நிழலே எமக்கு சுமையாக
நினைவுகளில் முகாரிராகம் பாடிட
காற்று வீசாத கணமொன்றில்
காலன் உம்மைப் பறித்திட
பப்பா .............
உம் முகத்திலோ புன்னகை .......
அத்தன் கழலடியில் ஆறி இருந்திடவே
சித்தன் சிவன் அவனைச் சிந்தித்திடுவோம் நாம்.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் உதவியோருக்கும் ஓடோடி வந்து ஆறுதல் கூறி எம்முடன் துயரத்தில் பங்கு கொண்டோருக்கும் பல்வேறு உதவிகள் புரிந்த பேரம்பலம் குடும்பத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், மைத்துனர்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

ஈஸ்வரி இல்லம்,
பட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
பேரம்பலம் ஞானசூரியன்,
மணியர்பதி லேன்,
கொக்குவில் மேற்கு. (76187)

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06 — 02 — 1971

உதிர்வு 09 — 07 — 1989

அமரர்

### மாரிமுத்து ஆச்சாரி விஜயகுமார்

(விஜய்)

(மாணவன் யா/ மத்தியகல்லூரி உயர்தர வகுப்பு)

"மரணத்தை மணந்து எம்மை நீ
பிரிந்து விட்டாய் அன்புச் செல்வமே
பதினொன்றென்ன பதினோராயிரம்
ஆனாலும் ஆறாது எம்துயர்"!

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

181, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (76240)

## 45 ஆம் நாள் நினைவலைகள்



மண்மகிழ 18 — 12 — 1969

கண்நெகிழ 24 — 05 — 2000

### அமரர் கந்தசாமி சிவபாலன் (B. com)

(ஆசிரியர், பளை மத்திய கல்லூரி)

மணமாலை சூடிநின்ற நிசமிங்கு மறையவில்லை
பிணமாலை சூடவைத்துக் கனவாகிப் போனீரோ?
அருகிரிவ் இட்டுநின்று வாழ்த்திவைத்த கதை மறந்து
வாய்க்கரிசி போடவைத்து, புன்னகையோ போனீரோ?
இலக்குகளே அற்ற கொடும் எறிகணையால் மண்துறந்து
இதயத்து நாயகரே எமைமறந்து சென்றீரோ?
கலங்கும் உள்ளங்கள் கதறியிரு கண் சொரிந்து
கண்ணீர் மலர்களையும் காலடியிற் சமர்ப்பித்தோம்.

அன்புமனைவி: சி. சந்திரராதேவி,
மகன்: சுகிர்தன், உறவினர், நண்பர்கள்.

நிரந்தர முகவரி:
முதலாம் கட்டை வீதி,
கிராம்புவில்,
சாவகச்சேரி வடக்கு.

தற்காலிக முகவரி:
திருமகள் சோதி வீதி,
சினட்டி—கரவெட்டி.
(76176)




வலி.தெற்கு பிரதேச சபையின் மத்திய சந்தையும், மத்திய பேருந்து நிலையமும் மீன் சந்தையும் புனரமைக்கப்பட்டு அண்மையில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டன.

பேருந்து நிலையத்தை வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் வி.எஸ்.சொக்கலிங்கமும், நவீனசந்தையை வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.மா.செல்வராசாவும் திறந்து வைப்பதை முதலாம், இரண்டாம் படங்களில் காணலாம். (இ-3)

### தற்போதைய நெருக்கடியான நிலையில்

# கற்பிக்கும் நேரத்தை வீணாக்காது ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும்

## மேலதிக கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்குடாநாட்டின் ஆசிரிய சமுதாயம் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு கற்பிக்கும் நேரத்தை வீணாக்காது உடனடியாகத் தம்மைக் கற்பித்தலில் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ச.நா.தணிகாசலம் பிள்ளை கேட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையை இயல்பு நிலையாக மாற்றிக் கொண்டு மாணவர்களின் கல்வி வளம் பெறுவதற்கு உழைக்க வேண்டும். எனவே அருகில் உள்ள பாடசாலைகளில் இணைந்து பணியாற்றுமாறும் அவர் ஆசிரியர்களிடம் கேட்டுள்ளார்.

இதேவேளை -

பாடசாலைகளின் அதிபர்கள் வேறு பாடசாலைகளின் ஆசிரியர்களை இடம்பெயர்ந்தவர்கள் என்று கருதாது அவர்களைத் தமது பாடசாலைகளில் இணைத்துக்கொள்ள வேண்டும். பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டி அவர்களை அருகில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கல்வி எங்கள் அழிக்க முடியாத சொத்து; அதனை எவராலும் அழிக்கவும் முடியாது என்பதனை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். பெற்றோர்கள் வலயம் மற்றும் கோட்டக் கல்வி அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தமது பிள்ளைகளின் கல்வியைத் தொடர வழி செய்ய வேண்டும் என்றும் தணிகாசலம்பிள்ளை மேலும் தெரிவித்தார். (ஐ-10)

# எரிபொருள் விநியோகம் இன்னும் சில வாரங்களில் சீராகிவிடும்

## செயலகக் கூட்டத்தில் அரச அதிபர் தகவல்

யாழ். மாவட்டத்தில் அடுத்த சில வாரங்களில் எரிபொருள் தட்டுப்பாடு முற்றாக நீங்கிவிடும் என்று யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

காங்கேசன்துறையில் உள்ள எரிபொருள் களஞ்சியத்தில் மண்ணெய், பெற்றோல், டீசல் ஆகிய எரிபொருள்கள் மிகத் தாராளமாக இருக்கின்றன.

இவற்றை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைச் சாட்டாக வைத்து பலர் அவற்றைப் பதுக்கி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் ஒரு சில நாள்களில் பதுக்கப்பட்ட பொருள்கள் சந்தைக்கு வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

கட்டுப்பாடின்றி எரிபொருள்களை விநியோகம் செய்யுமாறு எரிபொருள் நிலையங்களுக்கும் ப.நோ.கூ.சங்கங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார்.(ஐ-5-111)

# போட்டிப் பாதாள உலகக் குழுக்களே நீதிமன்ற குண்டு வெடிப்புக்குக் காரணம்

நுகேகொடையில் உள்ள ஹங்கொடவில நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு பாதாள உலகக் குழுக்களிடையே ஏற்பட்ட போட்டியே காரணம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பாதாள உலகக் குழுக்கள் கடந்த காலங்களில் நடத்தி வந்த தாக்குதல்களின் உச்சக் கட்டமாகவே இந்தக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது என்றும் பொலீஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலீஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

பாதாள உலகக் குழுக்கள் கடந்த காலங்களில் மேற்கொண்ட தாக்குதல்களுடன் ஒப்பிடும்போது இந்தத் தாக்குதல் வித்தியாசமானது என்றும் -

இது குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (இ-க-3)

### அதிகாரப் பரவலாக்கல்:

# அரசியல் கட்சிகளுடனான பேச்சுக்கள் பெரு வெற்றியை அளித்துள்ளன

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு,ஜூலை7

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்துப் பேச்சு நடத்தினோம். அவை பெருவெற்றியை அளித்துள்ளன என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சகல சமூகங்களுக்கும் நீதியும், நியாயமும் வழங்கப்படும் வகையில் ஒரு பரவலான அரசமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு சமாதானம் தேவை இல்லை. வடக்கையும் கிழக்கையும் ஒரு குழுவாக இருந்து நிர்வாகம் செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் அத்தகைய முயற்சிக்கு இடமளிக்க முடியாதுள்ளது. எனவே தான் விடுதலைப் புலிகள் யுத்தத்தை விரும்புவதால் அரசாங்கமும் யுத்தத்தை நடத்த வேண்டியிருக்கிறது.

சிங்கள, முஸ்லிம் சமூகத்தவர்களும் பெரும்பான்மை தமிழ் மக்களும் பயங்கரவாதத்தை எதிர்க்கின்றார்கள். இந்த மூன்று சமூகங்களும் சமாதானத்தை விரும்புகின்றன. இந்த சமூகங்களுக்கு சட்டரீதியான தீர்வு வழங்கப்படும்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அரசாங்கம் பெரும் பணியாற்றியுள்ளது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பல பாரபட்சங்களை அது ஒழித்துக்கட்டியுள்ளது.

சமாதானத்தை எதிர்த்து வரும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடுவது அரசாங்கத்தின் நோக்கமாகும். மேலும் விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்துக்குள் கொண்டு வர அரசினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன - என்றார். (இ-க-3)

# வெளிக்களநிலையப் பரீட்சை தொடர்ந்து நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம்,ஜூலை7

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்படும் ஜி.சீ.ஈ. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சைகள் கடந்த 29ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப்பரீட்சையில் இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களும் தோற்றுகின்றனர்.

இதேவேளை பாடசாலை ரீதியாக நடைபெறவுள்ள இரண்டாம் தவணைக்கான பரீட்சைகளும் விரைவில் நடைபெறவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-109)

### மலேரியா தடை இயக்கம்:

# வாகன வசதி இன்மையால் நடமாடும் சேவை பாதிப்பு

மலேரியா தடை இயக்கம் வாகன வசதிகள் இல்லாமையினால் தனது நடமாடும் வைத்திய சேவையினை முழுமையாக நடத்த முடியாதுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பிராந்தியத்திலுள்ள மலேரியா தடை இயக்கத்தின் செயற்பாடுகளுக்காக கொழும்பிலிருந்து இரு பிக்அப் வாகனங்களை அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் இதுவரையும் அந்த வாகனங்கள் அனுப்பி வைக்கப்படவில்லை.

வாகன வசதி கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் மட்டும் வட்டுக்கோட்டை, அராலி, கட்டுடை, துன்னாலை, நவாலி, தொண்டமானாறு, புலோலி, கட்டைவேலி ஆகிய பகுதிகளில் மலேரியா தடை இயக்கத்தின் நடமாடும் சேவைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

மலேரியாவின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டு வந்தபோதிலும் அண்மையில் இடம்பெற்ற இடப்பெயர்வினால் மலேரியா பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மலேரியா தடை இயக்கத்தின் பிராந்திய (யாழ்.) வைத்திய அதிகாரி டாக்டர் கே.ரி. சிவபாதம் உதயனுக்குத் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை, அராலிப் பகுதிகளில் இடம்பெயர்ந்தவர்கள் அதிகமாக இருப்பதனால் அப்பகுதிகளில் மலேரியாவின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது என்றும்-

அப்பகுதிகளில் மலேரியாவினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் மலேரியா தடை இயக்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது என்றும் -

மலேரியாவினைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்து வகைகள் தம்வசம் தாராளமாக இருப்பதனால் அதனைப் பரவவிடாமல் தடுக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார். (இ-5)

# வேலை வாய்ப்பு மோசடி: பணம் கொடுத்தவர் மீது சூடு

வெளிநாட்டுக்குச் செல்ல பணம் செலுத்திய நபர் ஒருவர் பணத்தை மீளக் கேட்டபோது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஒன்று திவுலுப்பிட்டியாவில் இடம்பெற்றுள்ளது.

அந்தப்பகுதியில் உள்ள முகவர் ஒருவரிடம் நான்கு லட்சம் ரூபாவை பிரஸ்தாப நபர் வழங்கியதாகவும் -

வெளிநாட்டுக்கு அனுப்ப அந்த முகவர் பின்னடித்ததை அடுத்து பணத்தை மீளத் தரும்படி பிரஸ்தாப நபர் கோரியதாகவும் -

பணம் தர மறுத்த முகவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும் - கூறப்பட்டது.

காயமடைந்த அந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலீஸார் பிரஸ்தாப முகவரையும் அவரது மனைவி, மகன் ஆகியோரையும் கைது செய்துள்ளனர். (இ-3)

# பொலன்னறுவை சிவன் கோயில் புனரமைப்பு வேலை நிறுத்தம்

கொழும்பு,ஜூலை7

பொலன்னறுவை சிவன்கோயிலில் இடம்பெற்றுவந்த புனரமைப்புப் பணிகளை உடன் நிறுத்துமாறு தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களப் பணிப்பாளர் தெரணியகல உத்தரவிட்டுள்ளார்.

ஆலய புனரமைப்புப் பணிகளுக்கு பாரிய இயந்திரங்கள் பாவிக்கப்படுவதால் கோயிலின் புராதன அமைப்புக்கள் சிதைவடைந்து விடும் என்றும் -

இதன் காரணமாக புனரமைப்புப் பணிகளை நிறுத்தவேண்டும் என்றும்- அவர் தமது உத்தரவில் தெரிவித்துள்ளார். பழைமை வாய்ந்த இந்த ஆலயத்தில் கருங்கல்லால் செதுக்கப்பட்ட சிற்பங்கள் உள்ளன என்றும் -

அவை அழிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கருத்தரங்கும் செயலமர்வும்

பருத்தித்துறை,ஜூலை7

வடமராட்சி கல்வி வலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான 'சனத்தொகையும் குடும்பவாழ்க்கைக் கல்வியும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கும் செயலமர்வும் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் முழுநாள் நிகழ்வாக புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-118)


திருவருள்மிகு

**மல்லாகம் பழம்பதி தேவஸ்தான**

**புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம்**

**பழம்பதி அடியார்களே!**

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் விக்கிரம வருடம் ஆனி மாதம் 26 ஆம் நாள் (10-07-2000) திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு கும்பாபிஷேக கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து

**தைலாப்பியம்:-** ஆனி 27ஆம் நாள் (11-07-2000) செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 2 மணி வரையும் பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

**கும்பாபிஷேகம்:-** ஆனி 28 ஆம் நாள் (12-07-2000) புதன்கிழமை காலை 10.59 மணி முதல் 11.59 மணி வரை வரும் சுபவேளையில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

**மண்டலாபிஷேகம்:-** தொடர்ந்து நடைபெறும்.

*அனைவரும் வருக!*

*பெருமானின் அருளைப் பெறுக!*

'பழம்பதியானின் கருணை மகத்தானது'

- ஆதீனகர்த்தா

(76249)

# நாடாளுமன்றில் நேற்று பெரும் அமளி துமளி!

## இரு தடவைகள் சபை ஒத்திவைப்பு

கொழும்பு,ஜூலை7

நாடாளுமன்றத்தில் நேற்று பெரும் அமளி துமளிக்கு மத்தியில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை நிறைவேற்றுப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நேற்றுக் காலை ஆரம்பமானது முதல் கூச்சலும், குழப்பமும் நிலவின.

செய்தித் தணிக்கை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் தகுதி வாய்ந்த அதிகாரியை மீண்டும் நியமித்தமை தொடர்பாக ஐ.தே.க. எம்.பிக்கள் எழுப்பிய பிரச்சினை காரணமாக சபையில் கூச்சலும் குழப்பமும் நிலவின.

ஐ.தே.கவினருக்கும் ஆளுங்கட்சியினருக்கும் இடையில் ஏற்பட்ட காரசாரமான விவாதம் காரணமாக இரு தடவைகள் சபை ஒத்திவைக்கப்பட்டது.

ஒரு கட்டத்தில் ஐ.தே.க உறுப்பினர்கள் சபாநாயகரின் ஆசனத்துக்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். (இ-க-3-4)

### ஊரடங்கு நேரம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஊரடங்கு இன்று காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டு மாலை 6 மணிக்கு மீண்டும் அமுலுக்கு வரும்.

குடாநாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் காலை 5 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்கு மாலை 7 மணிக்கு அமுலுக்கு வரும்.

பலாலியில் உள்ள வடபகுதி இராணுவத் தலைமையகம் இது தொடர்பான அறிவுறுத்தலை விடுத்துள்ளது. (இ-4)

## அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களிப்போர் தேசத்துரோகிகள்

### நாடாளுமன்றில் றொனி டிமெல் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை7

"அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களிப்பவர்கள் தேசத் துரோகிகளாக கருதப்படுவர்".

மேற்கண்டவாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நிதி அமைச்சருமான றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்பு மீதான பிரேரணையின் போது நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், தற்போதைய சூழ்நிலையில் தேசிய அரசு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அரசியல் கட்சிகள் பேதங்களை மறந்து ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-4)

## இருபது தொழிற்சங்கங்கள் அடையாள வேலை நிறுத்தம்

### 17ஆம் திகதி நடத்த முஸ்தீபு

கொழும்பு,ஜூலை7

1980ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் திகதி முதல் இடம்பெற்ற பொது வேலைநிறுத்தத்தின் இருபதாவது ஆண்டுப் பூர்த்தியை நினைவுகூரும் வகையில் எதிர்வரும் 17ஆம் திகதி அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த இருபது தொழிற்சங்கங்கள் இணைந்து அன்று அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ள இருப்பதாகக் கூறப்பட்டது. (இ-3)

## காரைநகருக்கு மின்சாரம் வழங்க புதிய ஜெனரேட்டர்

யாழ்ப்பாணம்,ஜூலை7

காரைநகருக்கு மின்விநியோகம் வழங்கப் புதிய ஜெனரேட்டர் ஒன்று விரைவில் வழங்கப்படவிருப்பதாக வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவர் என்.திரிலோகநாதன் தெரிவித்தார்.

அங்கு பொருத்தப்பட்டிருந்த ஜெனரேட்டர் பழுதடைந்ததை அடுத்து புதிய ஜெனரேட்டரைப் பெறுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் (ஜெகன்) மூலம் நடவடிக்கை எடுத்ததாகவும்-

அதன் பயனாகப் புதிய ஜெனரேட்டர் கிடைக்கவிருப்பதாகவும் - அவர் மேலும் சொன்னார்.

## முல்லையில் வெடி விபத்து ஆறு புலிகள் உயிரிழப்பு

வவுனியா,ஜூலை7

முல்லைத்தீவு பகுதியில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற பயிற்சியின் போது ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்து ஒன்றில் ஆறு புலிகள் உயிரிழந்துள்ளனர் என்று புலிகளின் குரல் வானொலி நேற்று அறிவித்தது.

மேஜர் அருட்சந்திரன் (ஜூலியன் ரஜி ராஜேஸ்வரன் - மன்னார்), மேஜர் செங்கண்ணன் (கனகலிங்கம் சசிகுமார் - யாழ்ப்பாணம்), மேஜர் சம்பத்குமார் (கனகரட்ணம் ஆனந்தராசா - யாழ்ப்பாணம்), கப்டன் குட்டிக் கண்ணன் (மகாலிங்கம் ஜெகதீஸ்வரன் - யாழ்ப்பாணம்), கரும்புலி மேஜர் ஸ்ரீவாணி (சின்னத்தம்பி சாந்தி - மட்டக்களப்பு), கப்டன் இளங்குமணன் (அருமைத்துரை பிரகாஷ் - யாழ்ப்பாணம்) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இதேவேளை -

அன்றைய தினம் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலின் போது கப்டன் தாரணி அல்லது வாசுகி (முத்துக்குமாரசுவாமி அமுதினி - யாழ்ப்பாணம்) என்ற புலி உறுப்பினர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## குடாநாட்டை கைப்பற்றும் முயற்சியை படையினர் முறியடித்து வருகின்றனர்

கொழும்பு,ஜூலை7

யாழ்.குடாநாட்டை மீண்டும் கைப்பற்றுவதற்காக விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை படையினர் முறியடித்து வருகின்றனர்

மேற்கண்டவாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணையை சமர்ப்பித்து பேசும்போது அவர் இப்படிக் கூறினார்.

புலிகள் மீண்டும் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற முயலுவதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தொடர்ந்தும் படையினர் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதேசமயம் யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களதொடர்ந்து அனுப்பப்பட்டுவருகின்றன. வடபகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற உகண கப்பல் கடந்த 26ஆம் திகதி விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-4)

### மரணமான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினி - யாழ்ப்பாணம்)

✪ 2ஆம் லெப்டினன்ட் மதிமகள் (நாகராசா அனுசா - யாழ்ப்பாணம்)

✪ லெப்டினன்ட் யாழ்அரசி (சூசைதாசன் ஹெஸ்சியா - மன்னார்)

✪ 2ஆம் லெப்டினன்ட் நிலவாணி (மாடசாமி கஜனி - யாழ்ப்பாணம்)

✪ லெப்டினன்ட வெண்ணிலா (இராமமூர்த்தி சுரோந்தினி - கிளிநொச்சி)

✪ 2ஆம் லெப்டினன்ட தமிழ்மலர் (திருநாவுக்கரசு ரஜீவா - பூநகரி)

✪ கலைக்குயில் அல்லது அருள் (பாலசிங்கம் பாலசாந்தினி- வவுனியா)

✪ லெப்டினன்ட நாமகள் செல்வமதி (கந்தையா கஜிந்தினி - மல்லாவி)

✪ லெப்டினன்ட் சுசிலா (தனுஷ்கோடி கலாரஜனி - பேராறு)

✪ 2ஆம் லெப்டினன்ட் நளாயினி அல்லது அமுதச்சுடர் (தர்மகுலசிங்கம் கௌசலா - கிளிநொச்சி)

✪ அலைமகள் அல்லது அகமகள் (செல்லையா செல்வகுமாரி- யாழ்ப்பாணம்)

✪ 2ஆம் லெப்டினன்ட் நாமதி கந்தசாமி கலைமதி - யாழ்ப்பாணம்)

✪ அகல்மொழி (முருகேசு யோகம்மா - யாழ்ப்பாணம்)

✪ 2ஆம் லெப்டினன்ட செந்தாழினி (பாக்கிநாதன் சற்குணதேவி - மல்லாவி)

✪ லெப்டினன்ட சிவநங்கை (தியாகராஜா விமோஜினி - கிளிநொச்சி)

✪ கலைவதனி அல்லது கலைமதி (முருகேசு தயாளினி - புதுக்குடியிருப்பு)

✪ பிறை அல்லது செல்வி (இராசநாயகம் பகீரதி - முல்லைத்தீவு)

✪ அகநிலா (இராமச்சந்திரன் சசிகலா - யாழ்ப்பாணம்)

✪ 2ஆம் லெப்டினன்ட் குமுதா (சபாபதிப்பிள்ளை விஜயலட்சுமி - கிளிநொச்சி)

✪ லெப்டினன்ட கீதவாணி (இலட்சுமணன் தர்சினி - யாழ்ப்பாணம்)

✪ மேஜர் செல்வி (பரராஜசிங்கம் கலைச்செல்வி - யாழ்ப்பாணம்)

✪ 2ஆம் லெப்டினன்ட் பாடினி (விஸ்வமங்களம் விமலராஜினி - யாழ்ப்பாணம்)

✪ காண்டி அல்லது யாழ்மொழி (செபமாலை மெரிண்டா - புதுக்குடியிருப்பு)

✪ லெப்டினன்ட் தமிழிசை (ஞானபண்டிதர் ரஞ்சிதமலர் - கிளிநொச்சி) (உ-9)

### அரசிடமிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பினரும் நேரடிப் பேச்சில் ஈடுபடும் சூழ்நிலையை உருவாக்கவும் முயன்றுவருகிறோம.

தற்சமயம் பேச்சுக்களில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் எமது முயற்சி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது . அத்துடன் இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு எட்டப்படும் வரை எமது முயற்சி, தொடரும்.

அந்த நிலை உருவாகும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு -

இப்படி அவர் கூறினார்.

இலங்கை அரசு தனது தீர்வு யோசனைகளை இன்னும் தமக்கு' அனுப்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-3.164)

### இந்திய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது நாட்டிலுள்ள எட்டு மாகாணங்களுக்கும் கூடுதல் அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இது விடயத்தில் நாம் மேலும் அதிக தூரம் செல்ல விரும்புகிறோம்.

மாகாணங்களின் உள்ளகப் பாதுகாப்பு, மாகாண அரசுகளின் உட்கட்டமைப்பு போன்ற விடயங்களில் சில மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களை வழங்கவும் ஏற்பாடு செய்யவுள்ளோம் -

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இனிமேலும் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை என்றே நான் நினைக்கிறேன். இது விடயத்தில் இணக்கநிலை ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்துடன் விடுதலைப்புலிகள் பேசவேண்டும். அதற்கான கதவுகள் திறந்தே உள்ளன- என்று அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறினார்.

அதிகாரப்பரவல் திட்டம் இப்போது இலங்கையில் பல கட்சிகள் தரப்பிலும் ஆராயப்பட்டு வருவதால், எதிர்வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதிக்கு முன்னர் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தாம் உறுதியாக நம்புவதாகவும் அமைச்சர் ஜெயக்கொடி பிரதமர் வாஜ்பாயுடன் நடத்திய பேச்சுக்களின்போது தெரிவித்தார் என அறிவிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கையில் வாழும் சகல இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதும், அந்நாட்டில் நிரந்தர அமைதியை உருவாக்கக்கூடியதுமான தீர்வு ஒன்றைக் காண்பதற்காக மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்குமென்று வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியிடம் உறுதியளித்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன. (அ)

### கிரனேட்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்ததில் கணவன்,மனைவி உயிரிழந்தனர்; அவர்களது எட்டு வயது மகன் காயம் அடைந்தார்.

அந்தப் பகுதியூடாகச் சென்ற சீருடையினரின் வாகனத்தில் இருந்த வீழ்ந்த கிரனேட் ஒன்று வெடித்ததிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-164-3)

### ஆசிரியர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் -

தமிழர் ஆசிரியர் சங்கப்பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் சுகவீன லீவைக் கையளித்துவிட்டு இன்று வீட்டுக்குச் சென்றுவிடுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே சமயம் - இந்தப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுமா என்பது குறித்து அறிவிப்பு ஏதும் நேற்று இரவுவரை இங்கு வெளியாகவில்லை. (இ-3-4)

### புலிகள் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில்லை என்றும் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் தலையிடப் போவதில்லை என்றும் ஏற்கனவே நாம் தெரிவித்திருக்கின்றோம்.

தமிழீழ மக்கள் நடத்திவரும் சுதந்திரப் போராட்டம் தமிழ் நாட்டில் பாதகமான விளைவை ஏற்படுத்தும் என இந்தியாவில் ஒரு அச்சம் நிலவிவருகின்றது. இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட பயமாகும். இந்தியா ஒரு சமஷ்டி அமைப்பான நாடு. எமது மக்கள் இலங்கையில் எதிர்கொண்டது போல இந்திய தமிழர்கள் கொடூரமான அடக்குமுறையை எதிர்கொள்ளவில்லை.

தமிழ் நாட்டில் பிரிவினைக்கான கோரிக்கைகள் இருக்கவில்லை. ஆனால் எமது போராட்டமும் அதற்கான துறை நிலைகளும் முற்றிலும் வேறுபட்டவை. அதேவேளை தமிழ் நாட்டில் போலியான பேரினவாதத்தையோ தேசியவாதக் கட்சிகளையோ நாம் கட்டியெழுப்ப விரும்பவில்லை. எமக்கு இந்தியாவின் நட்புறவு தேவைப்படுகின்றது. இந்திய மக்களின் ஆதரவும் தேவைப்படுகின்றது - இப்படி அவர் கூறினார். (இ-4)


நாளை ஆரம்பம்

O/Lஇல் வர்த்தகம் கற்காத மாணவர்களுக்கான வகுப்பு

A/L 2002

காலை 7.00 மணி (மு.நே)

கணக்கீடு

D.SAM

D.M.I. யாழ்நகர்.

(76244)

யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம்

நடத்தும்

A/L 2000

கணித, விஞ்ஞான மாணவர்களுக்கான பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

முதல் நாள் – 08–07–2000 சனிக்கிழமை

* காலை 8.30 - ஆரம்பம்
  பரீட்சை ஒரு நோக்கு ~ அ.பஞ்சலிங்கம்
* காலை 9.00 - தாவரவியல் ~ அ.குணசீலன்
  பிரயோக கணிதம் ~ S.V.மகேந்திரம்
* பிற்பகல் 1.00 - பௌதிகவியல் ~ S.சோதிலிங்கம்

இரண்டாம் நாள் – 09–07–2000 ஞாயிற்றுக்கிழமை

* காலை 8.30 - இரசாயனவியல் ~ ந.மகேஸ்வரன்
* பிற்பகல் 12.30 - பரீட்சையை அணுகுதல் ~
  பேராசிரியர் V.K.கணேசலிங்கம்
* பிற்பகல் 1.00 - விலங்கியல் ~ சி.கெங்காதரன்
  தூயகணிதம் ~ பு.குணம்

இடம்: யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

குறிப்பு:-
* இலவச கையேடுகள் வழங்கப்படும்.
* மேற்படி பாடங்கள் தொடர்பான சகல சந்தேகங்களுக்கும் விடையளிக்கப்படும்.

Rotaract Club of Jaffna Mid-Town

(C/12164)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.